Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 044 | சனிக்கிழமை | மார்கழி 24 ஆம் நாள் 09 ஜனவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## யாழ்.பல்கலையில் இரவோடிரவாக

# முள்ளிவாய்க்கால் தூபி இடித்தழிப்பு

- மக்கள் ஒன்றுதிரண்டு போராட்டம்
- பொலிஸ், அதிரடிப்படை குவிப்பு
- அரச உயர் மட்ட அழுத்தமே காரணமாம்

யாழ்ப்பாணம், ஜனவரி 9

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக வளாகத்துக்குள் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றம் நேற்று இரவோடிரவாக பல்கலைக்கழக நிர்வாகத்தின் உத்தரவின் பேரில் இடித்தழிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சு உட்பட அரசின் உயர் மட்ட அழுத்தங்களாலேயே இந்த நினைவிடம் இடித்து அழிக்கப்பட்டது என்று தெரிய வருகின்றது.

13 >



## மீண்டும் தூபி அமைப்போம்

### மாணவர்கள் சங்கற்பம்

யாழ்ப்பாணம், ஜன.9

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் அமைந்திருந்த முள்ளி வாய்க்கால் நினைவுத் தூபி இடித்தழிக்கப்பட்ட நிலையில் இன்று காலை தூபியை மீள அமைப்போம் என்று மாணவர்கள் உறுதியுடன் தெரிவித்தனர்.

நேற்று இரவு தூபி அழிக்கப்பட்டதும் மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குள் புகுந்து தூபியை மீள அமைக்கும் ஏற்பாடுகளை மேற்கொண்டனர்.

மூடப்பட்டிருந்த பல்கலைக் கழகத்துக்குள் நுழைந்தது 13 >

## தலைகாட்டாத துணைவேந்தர்

யாழ்ப்பாணம், ஜன.9

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் அமைந்திருந்த முள்ளி வாய்க்கால் நினைவுத் தூபி இடித்தழிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் பல்கலைக் கழகத்துக்குள் இருந்த துணைவேந்தர் வெளியே கூடியிருந்தவர்களைச் சந்திப்பதைத் தவிர்த்தார். 13 >

## சட்டவிரோத தூபியை அகற்றத்தான் வேண்டுமாம்

### துணைவேந்தர் சொல்லும் விளக்கம் இது



யாழ்ப்பாணம், ஜன.9

சட்டவிரோதமான ஒரு விடயத்தை வைத்திருக்க முடியாது. அது எப்படியோ அகற்றப்பட வேண்டிய விடயம். அதை வைத்துக் கொண்டிருக்க முடியாது என்று தெரிவித்தார் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். சிறிசற்குண ராஜா. 13 >

## விசாரணைக்காக அழைத்து செல்லப்பட்ட மாணவர்கள்!

யாழ்ப்பாணம், ஜன.9

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மாணவர்கள் இருவர் நேற்று நள்ளிரவு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். அவர்கள் பல்கலைக் கழகத்துக்குள் நுழைந்தமைக்காகவே விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்று தெரியவருகின்றது. (எ-26)

## அல்வாயில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று!

### ஆசிரியர்கள், மாணவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்!!

யாழ்ப்பாணம், ஜன.9

மூதூரில் மேற்கொண்ட எழுமாற்றுப் பரிசோதனையில் பருத்தித்துறையைச் சேர்ந்த ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவருக்கு அன்டிஜன் சோதனையே 13 >

## 'தயாசிறிக்கு கொரோனா'

கொழும்பு, ஜன.9

இலங்கையில் கொரோனா தொற்றுடன் அரசியல்வாதி ஒருவர் முதன்முதலாக அடையாளம் காணப்பட்டுள்ளார். 13 >

## யாழ்ப்பாணத்தில் 7 பேருக்கு தொற்று!

யாழ்ப்பாணம், ஜன.9

யாழ்ப்பாணத்தில் நேற்று 7 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 13 >

## உணவு உண்டபோது மயங்கியவர் சாவு!

யாழ்ப்பாணம், ஜன.9

உணவருந்திய போது விக்கல் ஏற்பட்டு மயங்கியவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 13 >

## வவுனியாவில் நேற்று 54 பேருக்கு தொற்று!

### உருவாகியது புதிய கொத்தணி!

வவுனியா, ஜன.9

வவுனியாவில் 204 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட எழுமாற்றுப் பரிசோதனையில் 54 பேருக்கு தொற்று இருப்பது உறுதிப்படு 13 >

## அரசியல்கைதிகள்விடுவிப்பு: அடுத்தவாரம் சந்தித்து பேச்சு

யாழ்ப்பாணம், ஜன.9

தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்புத் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் வெளிவிவகார 13 >

# கோத்தாபய அரசுக்கு நாம் பிற நாட்டவர்களே!

## நாடாளுமன்றில் விவரித்தார் விக்னேஸ்வரன் எம்.பி.

**யாழ்ப்பாணம், ஜன. 9**

**சட்டம், ஒழுங்கு, பாதுகாப்புத் துறைகளில் வேலை செய்பவர்கள் தவறிழைத்தால் அவர்களுக்கான தண்டனையைக் கடுமையாக நடைமுறைப்படுத்துவதே வழமை. ஆனால் இங்கு, தமிழர்களைப் படுகொலை செய்பவர்களுக்கே பதவி உயர்வுகளும், பதக்கங்களும், மன்னிப்புக்களும் வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்படுகின்றனர்.**

இத்தகைய காரணங்களால்தான் எமது இளைஞர்கள் ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டனர். ஒரே நாடு, ஒரே சட்டம் என அரசின் எல்லா உறுப்பினர்களும் கூறிவருகின்றனர். ஆனால், நடைமுறையில் எமக்கென வேறு சட்டம் நீதிக்கு முரணான வகையில் பின்பற்றப்படுகின்றது. இதுதான் யதார்த்தம். உங்களைப் பொறுத்தவரையில் நாம் வேறு நாட்டைச் சேர்ந்தவர்கள். ஆகவே, எமக்கான நீதியை நாம் தான் சர்வதேச சட்டங்களுக்கு அமைவாகப் பெற்றுக்கொள்ள வேண்டும். எமது இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் நியாயமானது என்பதை இன்று சர்வதேச ரீதியாக அரசின் செயற்பாடுகளே நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் இலங்கையர்களாக முன்னோக்கிச் செல்லப் போகின்றோமா அல்லது தொடர்ந்தும் குறுகிய அரசியல் இலாபங்களுக்காக இனங்களாகப் பிரிந்து பின்னோக்கிச் செல்லப் போகின்றோமா என்பதை ஆட்சியாளர்களே தீர்மானிக்க வேண்டும்.

தமிழ் அரசியல் கைதிகள் மன்னிப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. ஏற்கனவே நாட்டின் அரசை மாற்றப் போர் புரிந்த ஜே.வி.பியினர் அனைவருக்கும் மன்னிப்பு வழங்கியாகிவிட்டது. எமது இளைஞர்கள் தமது உரிமைகளுக்காகவே போரிட்டவர்கள். அரசை மாற்ற அல்ல. ஆகவே அவர்களை விடுவிக்க வேண்டும். போரில் தலைமைத்துவம் வகித்த, ஆணைகள் இட்ட தமிழ் இயக்க முக்கியஸ்தர்கள் பலர் அரசால் மிக்க நெருக்கத்துடன் அணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். ஆனால் சாதாரண இயக்க அங்கத்தவர்கள் மிகக் கொடூரமாக நடத்தப்பட்டு பல காலமாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். ஏன் என்ற கேள்விக்குப் பதில் இல்லை.

கொரோனாவால் அவஸ்தைப்படும் தமிழ் சிறைக் கைதிகளை வடக்கு கிழக்கு மாகாணங்களில் தனிமைப்படுத்தினால் தாங்கள் பாதுகாப்பான இடங்களில் இருக்கின்றோம் என்றாவது அவர்கள் உணர்வார்கள். பல தடவைகள் தமிழ்ச் சிறைக் கைதிகள் தென்னகச்சிறைகளில் கொடூரமாகத் தாக்கப்பட்டு கொல்லப்பட்டமை உங்கள் எல்லோருக்கும் நினைவிருக்கும்.

போர் முடிவுக்கு வர முன்னர் கைது செய்யப்பட்டு சிறைப்பட்டவர்களை போர் முடிந்து பத்து வருடங்களுக்கும் மேலாகிவிட்டமையால் பொது மன்னிப்பு வழங்குவதில் என்ன பிழை இருக்கின்றது?

உச்ச நீதிமன்றத்தில் நான் அளித்த நாகமணி வழக்கின் சாராம்சத்தை விளங்கிக்கொண்டு குற்ற ஏற்பு வாக்குமூலத்துக்கு மேலதிகமாக சொல்லப்பட்ட குற்றம் உண்மையில் நடந்தது என்பதை ருசிப்படுத்த சாட்சியங்கள் பெறப்பட்டிருந்தால் பல வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பன. குற்றம் உண்மையில் புரியப்பட்டதா என்று அறியாமல் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டும் வைத்து தண்டனை வழங்குவது எவ்வாறு நியாயமாகும் என்பதை எமது ஜனாதிபதியும் அரச மேல் மட்டமும் பரிசீலித்துப் பார்க்க வேண்டும்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் அல்லாது நாட்டின் வழமையான சட்டத்தின் கீழ் தமிழ்ச் சிறைக் கைதிகளுக்கு எதிரான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தால், அத்தனை பேரும் தகுந்த சாட்சியங்கள் இல்லாதமையால் எப்போதோ விடுதலை செய்யப்பட்டிருப்பர். ஆகவே தமிழ் அரசியல் கைதிகளை உடனே மன்னித்து விடுதலை செய்ய வேண்டும். என்றார். (த-ஒ.7.44)


## 7 மாதங்களான குழந்தைக்கும் கொரோனா




திருகோணமலை, ஜன. 9

திருகோணமலையில் 7 மாதக் குழந்தைக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 4ஆம் திகதி சிறிமாபுர பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவு நேற்று வெளியிடப்பட்டதில் இது தெரியவந்தது. சிறிமாபுர பிரதேசத்தில் 3ஆம் ஒழுங்கையில் வசிக்கும் பெண்ணுக்கும் அவரது பேரனுக்குமே தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (த-இ)



சாவகச்சேரி ஆதி வாரிவனேஸ்வரர் சிவன் கோவில் நன்னீராட்டு விழாவின் சங்கு முழுக்கு நேற்று நடைபெற்றது. (9)

## ஜெய்சங்கரின் வருகையால் சந்தேகம்தான் ஏற்படுகின்றது

கூறுகின்றது ஜே.வி.பி.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கை வந்ததன் நோக்கம் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்துகிறது. அவர் இலங்கையில் வாழும் மலையக மக்களை அல்லது தமிழ் மக்களுக்கான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்காக இங்கு வந்திருக்கவில்லை என்று மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

அவர் இலங்கை வந்ததற்கான முக்கிய காரணம் தமிழ் மக்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அல்லது மாறாக தமிழ் மக்களுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு அல்ல. அதற்கான அழுத்தத்தை ராஜபக்ச அரசுக்கு விதிப்பதற்கும் அல்ல. தற்பொழுது ராஜபக்ச அரசு இந்தியாவிடம் ஒரு பில்லியன் டொலர் ரூபாவைக் கடனாக கேட்டுள்ளது கடன் தருவதெனின், கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தைத் தர வேண்டும் என்பதே . இதன் உண்மையான நிதர்சனம். இந்தியா, சீனா, அமெரிக்கா, போன்ற நாடுகள் முற்றுமுழுதாக எமது நாட்டின் வளங்களை சுரண்டுவதற்கு முயற்சி செய்கின்றன. என்றார். (த-இ)

## புதுக்குடியிருப்பு சந்தை இன்று திறக்கப்படுகின்றது

முல்லைத்தீவு, ஜன. 9

புதுக்குடியிருப்பு பொதுச் சந்தை கொரோனா காரணமாக இரண்டு வாரங்கள் முழுமையாக பூட்டப்பட்டிருந்த நிலையில், பொதுச்சந்தையில் இயங்கும் புடவைக் கடைகள் மற்றும் பல சரக்குக் கடைகள் மட்டும் நிபந்தனைகள் அடிப்படையில் இன்று சனிக்கிழமை திறக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

பிரதேச சபை தவிசாளரின் ஏற்பாட்டில் சந்தையில் தொற்றுநீக்கி விசிறப்பட்டது.

எனினும், மரக்கறி வியாபாரிகள் மறு அறிவித்தல் வரை சந்தையில் வியாபார நடவடிக்கையில் ஈடுபடமுடியாது என்று சந்தை வணிகர்கள் தெரிவித்தனர். (த-19)

கொரோனா அதிகரிக்கும் நிலையில்

## இலங்கைக்கு படையெடுக்கும் உக்ரைன் சுற்றுலாவிகள்

கொழும்பு, ஜன.09

உக்ரைன் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிய மற்றுமொரு விமானம் நேற்று மதியம் 2 மணியளவில் மத்தள சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது. இது 6 ஆவது தொகுதி சுற்றுலா பயணிகளின் வருகையாகும். குறித்த விமானத்தில் 140 உக்ரைன் பிரஜைகள் வந்துள்ளனர்.

இதேவேளை, உக்ரைனில் கொரோனாத் தொற்று நாளாந்தம் அதிகரித்துள்ளதை யடுத்து நேற்றுத் தொடக்கம் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை உக்ரைன் நாடு முழுவதும் முடக்கப்படுகிறது. உணவகங்கள், வர்த்தக நிறுவனங்கள், திரையரங்குகள், உடற்பயிற்சி நிலையங்கள் என்பன மூடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)

## மல்லாவியில் கோவில்களில் உண்டியல்கள் உடைப்பு!

கிளிநொச்சி, ஜன. 9

கிளிநொச்சி மல்லாவி நகரிலுள்ள சிவன் கோவில் மற்றும் அதன் அருகிலுள்ள முருகன் கோவில் என்பனவற்றில் உண்டியல்கள் உடைக்கப்பட்டு பெருமளவான பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் அதிகாலை உண்டியல்கள் உடைக்கப்பட்டுள்ளன என்று கோவில்களின் நிர்வாகத்தினர் மல்லாவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த-19)

## மின் தாக்கி தந்தை சாவு

கொழும்பு, ஜன. 9

பொகவந்தலாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சென் ஜோன் டிலரி கிவ் மேற்பிரிவு தோட்டத்தில் மரக்கறி தோட்டத்தில் பொருத்தப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கி 5 பிள்ளைகளின் தந்தை உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தோனிசாமி (வயது 62) என்பவரே உயிரிழந்தார். அவர் தனது மரக்கறித் தோட்டத்தை மிருகங்களிடமிருந்து பாதுகாப்பதற்காக மின்சார வேலியை சட்டவிரோதமாக அமைத்திருந்தார் என்று கூறப்படுகின்றது. பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர். (த-இ)

## எரிபொருள் நிலைய பணியாளர்கள் தனிமை

கிளிநொச்சி, ஜன. 9

பூநகரி பள்ளிக்குடா பகுதியைச் சேர்ந்த கொரோனாத் தொற்றுக்குள்ளான நபர் பூநகரி வாடியடிச்சந்தியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மோட்டார் சைக்கிளுக்கு பெற்றோல் நிரப்பியுள்ளார். அதனால் அந்த நிலையத்தின் ஊழியர்கள் ஐவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டவுள்ளன என்று பூநகரி சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். எரிபொருள் நிரப்பு நிலையம் தொற்றுநீக்கப்பட்டு வழமைபோன்று இயங்குகின்றது. (த-ரி)

# எங்கள் இளைஞர்களை மீண்டும் ஆயுதமேந்த வைக்கப்போகின்றீர்களா?

## கோத்தா அரசிடம் சித்தார்த்தன் கேள்வி



**கொழும்பு, ஜன. 9**
**நாங்கள் மீண்டுமொரு ஆயுதப் போராட்டத்தை விரும்பவில்லை. ஆனாலும் மாகாண சபைகளை இல்லாதொழித்தால் இளைஞர்கள் மத்தியில் அது கொந்தளிப்பை உருவாக்கக்கூடும். சாத்வீகம் மற்றும் ஆயுதப் போராட்டங்களால் கொண்டு வரப்பட்ட 13ஐயும் இல்லாது செய்துவிட்டால் பின்னர் என்ன செய்யப்போகின்றீர்கள்? அதேவேளை, புதிய அரசமைப்பு வரும் என்று நான் தனிப்பட்ட ரீதியில் நம்பவில்லை. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஆரம்பத்தில் தமிழ் மக்கள் அறவழியிலேயே போராட்டங்களை முன்னெடுத்தனர். 1956ஆம் ஆண்டு பண்டாரநாயக்கவால் தனிச் சிங்கள சட்டம் கொண்டுவரப்பட்டபோது தந்தை செல்வா தலைமையில் சாத்வீக போராட்டங்கள் இடம்பெற்றன. அதன்விளைவாக தந்தை செல்வாவுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட பண்டாரநாயக்க முன்வந்தார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஜே.ஆர். ஜயவர்தன கண்டி யாத்திரையை ஆரம்பித்தார். தேரர்களும் எதிர்ப்பை வெளியிட்டனர். இதற்கு அஞ்சி பண்டாரநாயக்க மேற்படி ஒப்பந்தத்தை கிழித்தெறிந்துவிட்டார்.
அன்று அவர் அவ்வாறு செய்திருக்காவிட்டால், நாட்டில் மிகப்பெரிய போர் ஏற்பட்டிருக்காது.
இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் 13 ஆவது திருத்தச் சட்டம் உருவாக்கப்பட்டு மாகாணசபை முறைமை கொண்டுவரப்பட்டது. தற்போது 13 க்கு எதிராகவும் தெற்கில் கோசம் எழுப்படுகின்றது.
மாகாணசபை முறைமை வெள்ளை யானை எனவும், அதனை கட்டிகாப்பது வீண் செலவு எனவும் விமர்சிக்கப்படுகின்றது. இந்நாட்டில் மாறி, மாறி ஆட்சிக்கு வந்த அரசுகளே மாகாண சபைகளை வெள்ளை யானைகளாக்கின.
மாகாண சபைகளுக்கு பகிரப்பட்ட அதிகாரங்களில் மத்திய அரசு தலையிடுவது, கல்வி, சுகாதார அமைச்சர்கள் மாகாணத்தில் இருக்கையில், மத்தியில் அவ்வாறான அமைச்சுகளை உருவாக்குதல், மாகாணசபைகளுக்கென தனி அமைச்சை வைத்திருந்தல் போன்றவற்றாலேயே மாகாண சபைகளில் நிர்வாக நெருக்கடி ஏற்படுகின்றது. செலவுகளும் அதிகரிக்கின்றது. எனவே, அதிகாரப்பரவலாக்கலை சரியான முறையில் நடைமுறைப்படுத்தினால் மாகாண சபைகள் சிறப்பாக இயங்கும்.
அதேவேளை, புதிய அரசமைப்பு வரும் என்று நான் தனிப்பட்ட ரீதியில் நம்பவில்லை. அது வேறு பிரச்சினை. இருந்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக நியாயமான யோசனையை முன்வைத்துள்ளோம். அவ்வாறு தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டியது மக்கள் பிரதிநிதிகளின் கடமை. அதனை நாம் செய்துள்ளோம். 1972, 1978களில் அரசமைப்புகள் கொண்டுவரப்பட்டபோது தமிழ் மக்களின் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. எனினும், புதிய அரசமைப்பு என்பது சிறுபான்மையின மக்களை புறக்கணிக்கக்கூடாது. நியாயமான தீர்வு காணப்படவேண்டும், என்றார். (ஒ.44)

# ரியூசன்கள் 25ஆம் திகதி திறக்கப்படுகின்றன

*கல்வி அமைச்சர் அறிவிப்பு*

தனியார் கல்வி நிலையங்களின் கல்வி நடவடிக்கைகளை எதிர்வரும் 25ஆம் திகதி தொடக்கம் மீள ஆரம்பிக்க முடியும் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அறிவித்துள்ளார்.
நாடாளுமன்றில் நேற்று அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார். சுகாதார அமைச்சின் ஆலோசனையின் பிரகாரம் பாடசாலைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன.
தனியார் கல்வி நிலையங்களை மீள ஆரம்பிக்கவும் ஜனவரி 25ஆம் திகதி தொடக்கம் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. (ஒ.இ)

# 11 கைதிகளின் உடல்களிலும் சூட்டுக் காயங்கள்

கொழும்பு, ஜன. 9
நவம்பர் மாதத்தின் இறுதிப் பகுதியில் மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட களேபரத்தில் 11 கைதிகளும் துப்பாக்கிச் சூட்டு காயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளனர் என நேற்று வத்தளை நீதிவான் நீதிமன்றில் வெளிப்படுத்தப்பட்டது. சிறை வளாகத்தில் அமைதியின்மை குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட ஐந்து பேர் கொண்ட நிபுணர் குழுவின ராலேயே இந்த தகவல் இன்று நீதிமன்றுக்கு தெரிவிக்கப்பட்டது. எட்டு கைதிகள் மாத்திரம் துப்பாக்கிச் சூட்டுக்குள்ளாகி உயிரிழந்தனர் என முன்னர் கூறப்பட்ட நிலையிலேயே இந்த தகவல் வெளிவந்துள்ளது. இதேவேளை உயிரிழந்த கைதிகளில் கொரோனாத் தொற்றுக்குள்ளான கைதிகள் மூவரின் உடல்களை அடக்கம் செய்ய வத்தளை நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஒப்புதல் அளித்தார். (ஒ.இ)

# கொரியத் தூதுவருடன் அமைச்சர் தினேஷ் பேச்சு

கொழும்பு, ஜன.9
கொரோனாத் தொற்றுப் பரவலையடுத்து இடைநிறுத்தப்பட்டுள்ள வேலைவாய்ப்புக்களை மீள ஆரம்பிக்கும் நோக்கில் இலங்கையில் உள்ள கொரியத் தூதுவர் வூன்ஜின் ஜியோங்குடன் வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தன கலந்துரையாடியுள்ளார்.
சந்திப்பின்போது, தொற்று நிலைமையால் தற்காலிகமாக இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள தொழில்களுக்காக இலங்கையில் இருந்து புதிய பணியாளர்களைப் பெற்றுக்கொள்வதை மீண்டும் ஆரம்பிப்பதற்கான கொரிய அரசாங்கத்தின் உதவியை வெளிநாட்டு அமைச்சர் கோரியுள்ளார். இலங்கையிலிருந்து கொரியாவுக்கான வேலைவாய்ப்பை விரைவாக மீண்டும் தொடங்கும் நோக்கத்துடன் கொரிய அதிகாரிகளுடன் இணைந்து, சுகாதார மற்றும் ஏனைய தேவைகளை பூர்த்திசெய்ய இலங்கை அரசாங்கம் தயாராக உள்ளது என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (வ-இ)





அல்வாய் வடக்கைச் சேர்ந்த 145 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. அல்வாய் வடக்கு மஹாத்மா புலம்பெயர் உறவுகளால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-26)

# பிரதேச சபையின் கீழ் திண்மக்கழிவு அகற்றல்!

வலி.தென்மேற்கு, ஜன.9
திண்மக்கழிவுகளை கண்டகண்ட இடங்களில் போடுவதைக் கட்டுப்படுத்துவதற்கு முன்வந்துள்ள வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, அவற்றை ஊழியர்கள் மூலம் வீடுகளில் வைத்து சேகரித்து அவற்றுக்குரிய கட்டணத்தை குடியிருப்பாளர்களிடமிருந்து அறவிடும் முறையை அமுல்படுத்தவுள்ளது.
காக்கை தீவிலிருந்து மாதகல் வரை நான்கு உப அலுவலகங்களைக் கொண்ட பரந்துபட்ட வலிகாமம் தென்மேற்கு பிரதேசத்தில் நாளாந்தம் கண்ட கண்ட இடங்களில் கட்டுப்பாடின்றி தரம் பிரிக்கப்படாமல் கொட்டப்படும் திண்மக்கழிவுகளால் சுகாதார சீர்கேடுகள் ஏற்படுவதுடன் அவற்றை அகற்றுவதற்கு பிரதேச சபைக்கு மிகப் பெரிய வேலைப்பளு ஏற்படுகின்றது.
அத்துடன் வீடுகளில் இருந்து சேகரிக்கப்படும் கழிவுகள் வாகனத்தில் வைத்து தரம் பிரிக்கப்பட்டு புதிய இடத்தில் சேர்ப்பதில் காலதாமதமும் ஏற்படுகின்றது.
இதனால் இது குறித்து பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராய்ந்த உறுப்பினர்கள் கட்டணம் அறவிடும் முறையை அமுல்படுத்த முன்வந்துள்ளனர்.
பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள வீடுகளில் முறையாக தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளை ஊழியர்கள் மூலம் சேகரிக்கும்போது கட்டணம் அறவிடும் முறையை அறிமுகம் செய்வது என்றும் முதலில் பரீட்சார்த்தமாக மானிப்பாய் தெற்கு வட்டாரத்தில் இந்த திட்டத்தை அறிமுகம் செய்து நடைமுறைப்படுத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.
கட்டணம் அறவிடும்போது அதற்கென ஒரு பதிவு அட்டையை குடியிருப்பாளர்களுக்கு விநியோகித்து அதில் புள்ளியிடும் முறையின் மூலம் கொடுப்பனவு செலுத்தியதை உறுதிப்படுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. (ந-115)

# உவர்ப் பரம்பலைத் தடுக்க நடவடிக்கை எடுக்குக!

## விவசாயிகள் கோரிக்கை

**முல்லைத்தீவு, ஜன.9**
**முல்லைத்தீவு அம்பலப்பெருமாள் குளம் கிராமத்தில் ஏற்பட்டுள்ள உவர்ப் பரம்பலைத் தடுப்பதற்கு துணுக்காய் பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கிராம விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**



இந்தக் கிராமத்தில் காணப்படுகின்ற அம்பலவன் சின்னக்கட்டு குளத்தின் கீழான பெருமளவு நிலம் உவர் நிலமாக மாறிவருவதால் அங்குள்ள மரங்கள் அழிவடைந்து வருகின்றன. இந்த உவர்ப் பரம்பலைத் தற்போது தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், அம்பலவன் சின்னக்கட்டு குளம், அம்பலப்பெருமாள் குளம் ஆகிய இரு குளங்களின் கீழான வயல்நிலங்கள் உவர் நிலங்களாக மாறக்கூடிய அபாயம் காணப்படுகின்றது. உவர்ப் பரம்பல் பரவாமல் இருப்பதற்கான தடுப்பணைகள் அமைக்கப்பட வேண்டும். உவர்ப் பரம்பல் ஏற்பட்டுள்ள நிலப் பரப்பில் உற்பத்தியாகக் கூடிய பெருமளவு மரக் கன்றுகளை நடுகை செய்ய வேண்டும். இது தொடர்பாக துணுக்காய் பிரதேச செயலகம் கிராம மக்களுடன் கலந்துரையாடி விழிப்புணர்வை ஏற்படுத்தி உவர்ப் பரம்பலைத் தடுக்க வேண்டும் என்பதும் இப்பகுதி விவசாயிகளின் கோரிக்கையாகும். (ற-ரி2)

## இடைத் தரகர்களின் தலையீட்டை நீக்குமாறு உற்பத்தியாளர் கோரிக்கை

சாவகச்சேரி, ஜன.9
சாவகச்சேரி பேருந்து நிலையத்திலுள்ள இடைத் தரகர்களின் தலையீட்டை நீக்குமாறு சந்தைக்கு பொருள்கள் கொண்டுவரும் உற்பத்தியாளர்கள் சாவகச்சேரி நகரசபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.
சந்தை மூடப்பட்டு வேறு இடங்களில் செயல்படுவதால் பேருந்து நிலையத்திலுள்ள தரகர்கள் பொருள்கள் கொண்டு வருவோரை ஏமாற்றி குறைந்த விலையில் பொருள்களை கொள்வனவு செய்கின்றனர். இவ்வாறான தரகர்களின் தலையீட்டை நீக்கினால் சந்தை விற்பனை அலகுகள் காணப்படும் இடத்துக்குச் சென்று நியாயமான விலைக்கு பொருள்களை வழங்க முடியும் என உற்பத்தியாளர்கள் சுட்டிக்காட்டி யுள்ளனர்.
இது தொடர்பில் உற்பத்தியாளர்கள் ஒருவர் தெரிவித்துள்ளதாவது, நேற்றையதினம் வலிகாமத்திலிருந்து சந்தைக்கு வெங்காயம் கொண்டு வந்த வேளையில் எம்மிடமிருந்து ஒரு கிலோ 200 ரூபா வீதம் இடைத் தரகரும் அவருடன் நின்றவர்களும் வெங்காயத்தை வாங்கினர்.
ஆனால் சந்தைக்குச் சென்று விசாரித்த போது கிலோ 400 ரூபாவாக விற்பனை செய்யப்படுவதை அறிந்தோம். எம்மைப்போல் பலர் தரகர்களிடம் ஏமாறுவதால் பேருந்து நிலையத்தில் உள்ள தரகர்களின் தலையீட்டை நீக்கினால் எம்மைப் போன்ற உற்பத்தியாளர்கள் எமது உற்பத்திப் பொருள்களுக்கு நியாயமான இலாபம் ஈட்ட முடியும் எனத் தெரிவித்தனர். (வ-9)

## மயானத்தின் சுற்றுமதிலின் ஒரு பகுதி நிறைவு

கொடிகாமம், ஜன.9
சாவகச்சேரிப் பிரதேசசபையின் நிதி ஒதுக்கீட்டில் வரணி நாவற்காடு, குடமியன் இந்து மயானத்துக்கான சுற்று மதிலின் ஒரு பகுதி நிறைவுசெய்யப் பட்டுள்ளது.
வரணி வட்டார சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் சி. பிரபாகரனின் வேண்டுகோளுக்கு இணங்க கடந்த 2019 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் முதற்கட்டமாக இதற்காக ஒரு இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப் பட்டது.
கடந்த வருடத்தில் இந்த மதில் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த நிலையில், கொரோனா அச்சுறுத்தல் காரணமாக தடைப்பட்டது. தற்போது அந்த வேலைத்திட்டம் முழுமையாக முடிவுற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ற-159)







## மரக்கன்றுகள் கையளிப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட மாணவர்களின் மரநடுகைத் திட்டத்தை வலுப்படுத்தும் முகமாக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் உதயன் குழுமத்தலைவருமாகிய ஈஸ்வரபாதம் சரவணபவனால் ஒரு தொகுதி மரக்கன்றுகள் கையளிக்கப்பட்டன. பல்கலைக்கழகத்தின் கலைப்பீட 40 ஆம் அணி மாணவர்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக இவை வழங்கப்பட்டன. (வ-ரி4)

## சஜித்துக்கு அழைப்பு விடுத்தார் ஜெய்சங்கர்

கொழும்பு, ஜன.9
எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ள வேண்டும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் அழைப்பு விடுத்துள்ளார்.
இந்திய வெளிவிவகார அமைச்சர் எதிர்க்கட்சித் தலைவரை நேற்றுமுன்தினம் சந்தித்தபோது அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.
இதன்போது இவர்கள் இருவரும் இரு தரப்பு உறவுகள் குறித்தும், இருநாடுகளிடையேயான நீண்டகால வரலாற்று தொடர்புகள் குறித்தும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டனர். (ற-இ)

## மத்தியஸ்தர் சபை அமர்வு இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.9
யாழ் மாவட்ட விசேட காணி மத்தியஸ்தர் சபை அமர்வு இன்று சனிக்கிழமை முதல் மீண்டும் யாழ். மத்திய கல்லூரியில் ஆரம்பமாக உள்ளது. இதற்கான உத்தரவை நீதி அமைச்சின் மத்தியஸ்தர் ஆணைக்குழு, யாழ். மாவட்ட காணி மத்தியஸ்தர் சபையின் தவிசாளர் தேவதயாளனுக்கு அறிவித்துள்ளது.
எனவே காணிப் பிணக்குடன் தொடர்புடையவர்கள் யாழ். மாவட்டத்தில் 15 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு உட்பட்ட பொதுமக்கள் பிணக்குகள் தொடர்பான விபரங்கள், அதற்கான கடிதங்கள், வரைபடங்கள், 5 ரூபா முத்திரை மற்றும் முழுமையான விபரங்களுடன் இன்று தொடர்புகொள்ளுமாறு தவிசாளர் தேவதயாளன் தெரிவித்துள்ளார்.
இதேவேளை வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்ட காணி மத்தியஸ்தர் சபைகள் கடந்த வாரம் முதல் விசேட மத்தியஸ்த பணியை ஆரம்பித்துள்ளன. (ந-50)

## இலங்கைக்கு 18,000 போதை வில்லைகள்!

### பூனைகளுக்கான உணவு என இறக்குமதி

கொழும்பு, ஜன.9
பூனைகளுக்கான உணவு என்ற அடிப்படையில் பெல்ஜியத்திலிருந்து சில பொதிகள் இலங்கைக்கு எடுத்து வரப்பட்ட நிலையில், அவை போதைப்பொருள் வில்லைகள் என்பதை சுங்க அதிகாரிகள் மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் வைத்து துல்லியமாக கண்டுபிடித்துள்ளனர். மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்துக்கு வந்து சேர்ந்த ஒரு சில தபால் பொதிகளில் ஏற்பட்ட சந்தேகம் காரணமாக, இலங்கை சுங்கத்தரப்பினர் விசாரணை களை ஆரம்பித்தனர்.
இதனால் 18 ஆயிரம் போதைப் பொருள் வில்லைகள் அந்தப் பொதிகளில் இருப்பதை அதிகாரிகள் இனங்கண்டு கொண்டனர். 9 கிலோ கிராம் எடை கொண்ட இந்த 18 ஆயிரம் போதைப்பொருள் வில்லைகளின் பெறுமதி சுமார் 13 கோடி ரூபா என சுங்கத் தரப்பினர் தெரிவிக்கின்றனர். பூனைகளின் உணவு என்ற போர்வையில் பொதிகளில் அடைக்கப்பட்ட நிலையில், பெல்ஜியத்திலிருந்து இந்தப் போதைப்பொருள் வில்லைகள் எடுத்து வரப்பட்டுள்ளன எனத் தெரியவருகின்றது. (ற-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## நினைவுகளை அழித்தல்

நினைவுகளின் நீட்சியை இல்லாமல் செய்வதனூடாக, ஒரு இனத்தின் விடுதலைக் கனவை நீர்த்துப் போகச் செய்யமுடியுமென்று அதிகாரம் நீண்டகாலமாக நம்பிக் கொண்டிருக்கிறது. அது உண்மையும் கூட. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக தமக்கென்று ஒரு அங்குல நிலம் கூட இல்லாமல் அலைந்து திரிந்த போதும், யூதர்களின் நினைவில் அவர்களின் தேசம் உயிர்ப்போடு இருந்தது. அப்படி அவர்கள் நினைவின் வழியே பல தலைமுறைகளாகச் சுமந்த தேசத்தை, காலம் கனிந்தபோது, பலம்மிக்க இஸ்ரேலாக உரு வாக்கினார்கள். அவர்களின் நினைவில் சுமக்கப்பட்ட தேசக்கனவு , முளையிலே கருக்கப்பட்டிருந்தால் இன் றைக்கு இஸ்ரேல் என்றொரு நாடே உலக வரைபடத் தில் உருவாகியிருக்காது.

அதனால் தமக்கெதிரான அமைப்புகளை, மனிதர் களை, கொள்கைகளை மாத்திரமல்லாது நினைவுகளை யும் வழித்துத் துடைக்கவே அதிகாரம் வெறி கொண் டலையும். இலங்கை அரச படைகள் விடுதலைப்புலி களின் கட்டுப்பாட்டு பகுதிகளைக் கைப்பற்றியதும் செய்த முதல் வேலையும் அதுதான். எங்கெல்லாம் புலிகளை அல்லது விடுதலைப் போராட்டத்தை அல் லது படைகளின் படுகொலைகளை நினைவுபடுத்தும் சின்னங்கள், தூபிகள் இருந்தனவோ அவையெல்லாம் இடிக்கப்பட்டன. மாவீரர் துயிலுமில்லங்கள் கனரக வாகனங்கள் மூலம் சிதைக்கப்பட்டன. கட்டடங்கள் தகர்க்கப்பட்டன. இப்படியாக எல்லா ஞாபகமூட்டி களையும் அழித்து விட்டோம் என அவர்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டிருந்தார்கள்.


ஆனால் அவர்களாலேயே மோப்பம் பிடிக்கமுடியாத, தமிழ் மக்களின் விடுதலைத் தாகத்தை சொல்கின்ற ஏராளமான நினைவுச் சின்னங்கள் இன்னமும் அவர்க ளுக்கு தலையிடியாகவே இருக்கின்றன. அவற்றையும் அழித்துவிட்டால் அடுத்து வரும் தலைமுறை மெல்ல மெல்ல விடுதலைக் கனவைத் தொலைத்துவிடும் என்று திட்டமிட்டு, அதற்கான காரியங்களில் இறங்கி யுள்ளனர். அதன் ஒரு கட்டமாகவே நேற்றிரவு யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளி வாய்க்கால் நினைவுத்தூபி இடிக்கப்பட்டிருக்கிறது. அரசுக்கு வாலாட்டும் பணியை மிகக் கச்சிதமாகச் செய்யும் பல்கலைக்கழக நிர்வாகம், இரவோடிரவாக, மின் விளக்குகளை அணைத்துவிட்டு, இருளின் துணை யோடு இந்த கேவலமான காரியத்தை செய்திருக்கிறது.

"அரச உயர்மட்டமும், பல்கலைக்கழக ஆணைக் குழுவும் அழுத்தம் கொடுத்தன. நாங்கள் இடிக்கா விட்டால் வேறு வழியில் இடித்திருப்பார்கள். அந்த அவமானம் வேண்டாமென்று நாங்களே இடித்தோம்" என்று சாட்டு வேறு சொல்கிறது பல்கலை நிர்வாகம். ஒரு சதுப்புநிலக் கொலைக்களத்தில் லட்சக் கணக்கில் எம்மவர்கள் கொத்துக் கொத்தாக மிலேச்சத்தனமாக படையினரால் இனப்படுகொலை செய்யப்பட்டதை நினைவுகூரும் சின்னத்தை, எப்படி கை கூசாமல் இடிக்க இவர்களுக்கு மனம் வந்தது?. புலிகள் சார்ந்த தூபி என்றால் கூட பயங்கரவாத தடைச்சட்டம் அது, இது என்று சாக்குப்போக்குச் சொல்லலாம். ஆனால் இது கொலையுண்ட அப்பாவி மக்களை நினைவு கூர அமைக்கப்பட்ட தூபி. உயிரிழந்த எங்கள் உறவுகளை, அதுவும் சாதாரண மக்களை கூட தூபி வடிவில் நினை வேந்தவும் உரிமையில்லையா எமக்கு?.

'அர்த்தபூர்வமான அதிகாரத்தோடு கூடிய தீர்வை தமிழர்களுக்கு வழங்குங்கள்' என்று இந்திய வெளி விவகார அமைச்சர் இரு நாள்களுக்கு முன்னர் அர சுக்குச் சொல்லிச்சென்றிருந்தார். இப்படி நினைவுச் சின்னங்களை இடித்தழிப்பதுதான் கோத்தா அரசுக் குத் தெரிந்த 'அர்த்தபூர்வமான அதிகாரம் கொண்ட தீர்வு' போலும்.

நினைவுகளை அழிக்க நினைக்கும் போதுதான் அது இன்னும் மூர்க்கமாக மூண்டெரியும். ஆனால் பாவம், அதிகாரம் அதை ஒருபோதும் உணரப்போவதில்லை.

### இன்றைய கேலிச்சித்திரம்




நன்றி - நாமல் அமரசிங்க

# தகவல் தொழில்நுட்பத்தில் அரசை மிஞ்சினர் புலிகள்

## சாணக்கியன் எம்.பி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன.9

தகவல் தொழில்நுட்பத்துறையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கை அரசை விடவும் முன்னிலை வகித்த னர் என நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கி யன் தெரிவித்துள்ளார்.



நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தா வது;

கடந்த 2003ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் 'வன்னி ரெக்' என்ற ஒரு தக வல் தொழில்நுட்பத் திட் டத்தை அறிமுகம் செய்த னர். அதில் பிரமாண்டமான 'ஐரி பார்க்' திட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டது. அவர் களின் ஆற்றலுக்கு நிகரான இவ்வாறான திட்டங்கள் இது வரையில் நாட்டில் இருந்த தில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளை ஒரு பயங்கரவாத இயக்கம் என்று கூறினா லும், தகவல் தொழில்நுட்பத் துறையில் புலிகள் அரசை விட முன்னணியில் இருந்த னர். 'வன்னி ரெக்' தொடர்பி லான தகவல்களை நான் சபையில் ஆவணப்படுத்து கின்றேன். இதனோடு சம்பந் தப்பட்டவர்கள் இதனைப் பார்க்கலாம்.

அத்துடன் மட்டக்களப்பைச் சேர்ந்த சஞ்சீவன் என்னும் நபர் நீருக்கு அடியில் சென்று தகவல்களைச் சேகரிக்கும் ஓர் கண்டுபிடிப்பைச் செய்து இருந்தார். இதற்கான காப்புரி மையும் பெற்றுள்ளார். இப் படியானவர்களை ஊக்கு வித்து எமது நாட்டின் வளர்ச் சியில் பங்காற்ற வைக்க வேண்டும் - என்றார். (ப)

# விசாரணைகள் இன்றி கைதிகளை தடுத்து வைத்திருக்கவே முடியாது

## நீதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.9

சிறையில் உள்ள கைதி களை விசாரணைகள் இன் றித் தடுத்து வைக்காமல், அரசு கொள்கை ரீதியில் தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரி வித்தார். நாடாளுமன்றத் தில் நேற்றுமுன்தினம் வாய்மூல வினாக்கான விடை நேரத்தில் தமிழ் அர சியல் கைதிகள் குறித்து ஆளும் கட்சி உறுப்பினர் சுரேன் ராகவன் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே நீதி அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசியல் கைதிகள் என எவருமே சிறைகளில் இல்லை. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தமிழ் கைதிகள் சிலர் உள்ளனர். எனினும் எந்தவித வழக் கும் தொடராது நீண்டகால மாக அவர்களுக்குப் பிணை வழங்காது தடுத்து வைக்கவும் முடியாது என் பதை நான் ஏற்றுக்கொள் கிறேன். அவர்களை விடு விப்பது குறித்து அரசு கொள்கை ரீதியில் தீர்மா னம் எடுக்க வேண்டும். எனினும் இதுவரையில் அவ்வாறான தீர்மானம் எடுக்கப்படவில்லை என் றும் நீதி அமைச்சர் தெரி வித்தார். (ப)



# ஹிஸ்புல்லாவுக்கு கொரோனா தொற்று

கொழும்பு, ஜன. 9

ஈஸ்டர் தாக்குதல் தொடர் பான விசாரணைகளுக் காக கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட சட்டத் தரணி ஹிஸ்புல்லாவுக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

சட்டத்தரணி ஹிஸ்புல்லா நேற்றுமுன்தினம் நீதிமன் றத்தில் ஆஜர்படுத்தப் படாத நிலையில், அவர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார் என சி.ஐ.டியினர் நீதிமன்றில் தெரிவித்தனர். (ரி5)

# 5ஜி தொழில்நுட்பத்துக்கு மன்னாரில் அனுமதியில்லை

## வதந்திகளை நம்ப வேண்டாம் என்கிறார் தவிசாளர்

மன்னார், ஜன.9

**மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு முன்பாக அமைக்கப்பட்ட தொலைத் தொடர்புக் கோபுரத்தின் 5ஜி தொழில்நுட்பத்துக்கு இது வரை மன்னார் நகர சபை அனுமதி வழங்கவில்லை என்று மன்னார் நகர சபையின் தவிசாளர் எஸ்.ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

தற்போது வரை மன்னார் நகர சபையால் எவ்வித தொலைத் தொடர்பு சேவைகளுக்குமான அனுமதியும் வழங்கப்படவில்லை. சபையின் அனுமதியுடன், கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய கோபுரம் மற்றும் மின் குமிழ்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் நகரத்தில் இதுவரை 4ஜி மற்றும் 5ஜி தொழில் நுட்பங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

தேசிய தொலைத்தொடர்பு ஆணைக்குழுவின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் மாவட்டச் சுற்றுச்சூழல் அதிகார சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றிடம் உரிய அனுமதிகள் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னரே மன்னார் நகர சபை அனுமதி வழங்குவதா? இல்லையா? என்பது தொடர்பாகப் பரிசீலிக்கும். அத்தோடு மன்னார் நகர சபையால் மன்னாரில் 5ஜி தொழில்நுட்பத்துக்கு எவ்வித அனுமதியும் வழங்கப்பட மாட்டாது. மக்கள் மத்தியில் ஏற்பட்ட வதந்திகளை நம்ப வேண்டாம். மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்ற எந்தவித வேலைத்திட்டங்களுக்கும் மன்னார் நகர சபையால் அனுமதி வழங்கப்படமாட்டாது - என்றார். (ப-56)



# வணக்கஸ்தலங்களில் சர்வமத வழிபாடுகள்

கிளிநொச்சி.ஜன.9

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தால் வருடம்தோறும் புதுவருடத்தை வரவேற்கும் முகமாக வணக்கஸ்தலங்களில் சர்வமத வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்திலும், கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் லும்மினி விகாரையிலும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் கிளாலி புனித யாகப்பர் தேவாலயத்திலும், பூநகரி பிரதேச செயலர் பிரிவில் நாச்சிக்குடா முகைதீன் ஜும்மா பள்ளிவாசலிலும் இவ் விசேட வழிபாடுகள் நடத்தப்படவுள்ளன.

இதன் ஆரம்ப நிகழ்வாக கடந்த புதன்கிழமை புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தில் விசேட வழிபாடுகள் நடைபெற்றன.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலர் க.ஸ்ரீமோகனன், கண்டாவளை பிரதேச செயலர் த.பிருந்தாகரன், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கா.இராசதுரை, மாவட்ட மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-113)



# போதை பொருளுடன் இருவர் கைது

சாவகச்சேரி, ஜன. 9

மதுவரி திணைக்களத்தினர் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட திடீர் பரிசோதனையில் சாவகச்சேரி நகரப் பகுதியில் 270 மில்லி கிராம் ஹெரோய்ன் போதைப் பவுடருடன் ஒருவரும், மிருசுவில் உசன் பகுதியில் 71 கிராம் கஞ்சாவுடன் ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த தகவல்களை யடுத்து அங்கு சென்ற பொலிஸார் குறித்த நபர்களைக் கைது செய்ததுடன் போதைப் பொருள்களையும் கைப்பற்றியுள்ளனர். (ரி5-9)

# உழவு இயந்திரங்களை பயன்படுத்த விவசாயிகள் முன்வருவதில்லை

## கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் விசனம்



முல்லைத்தீவு, ஜன. 9

முல்லைத்தீவு மாவட்டத்தில் கமநல சேவை நிலையங்களிலுள்ள உழவு இயந்திரங்களை பயன்படுத்துவதற்கு விவசாயிகள் முன்வரு வதில்லை என கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.புனிதகுமார் தெரிவித்தார்.

கமநல சேவை நிலையங்களில் உள்ள உழவு இயந்திரங்களின் பயன்பாடு தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், மீள்குடியேற்ற தொடக்கத்தில் உழவு இயந்திரங்களை விவசாயிகள் கூடுதலாக கமநல சேவை நிலையங்கள் ஊடாக பயன்படுத்தினர். தற்போது கூடுதலான விவசாயிகளிடம் உழவு இயந்திரங்கள் உள்ளன. காடுகளை அழித்து தொடங்கப்படுகின்ற பயிர்ச் செய்கைகளுக்கே கமநல சேவை நிலையங்களின் உழவு இயந்திரங்களை விவசாயிகள் பயன்படுத்த முன்வருகின்றார்கள். இது தவிர்க்கப்பட வேண்டும். முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவை நிலையங்களில் 50க்கும் மேற்பட்ட உழவு இயந்திரங்கள் உள்ளன. எதிர்காலத்தில் இவற்றை விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்குவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார். (ரி5-ரி2)

# வங்கி ஊழியர் ஒருவருக்கு கொரோனாத் தொற்றுறுதி

திருகோணமலை, ஜன. 9

திருகோணமலை நகரில், தனியார் வங்கியொன்றில் பணிபுரியும் இளம் ஊழியருக்கு கொரோனாத் தொற்று, நேற்று முன்தினம் உறுதி செய்யப்பட்டது என திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வீ.பிரேமானந் தெரிவித்தார்.

இந்த ஊழியருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையின்போதே, தொற்று உறுதி செய்யப்பட்டது என அவர் தெரிவித்தார்.

இதனையடுத்து, குறித்த ஊழியர் பணி புரிந்த தனியார் வங்கி மூடப்பட்டதுடன், அங்கு கடமை புரியும் 10 ஊழியர்களுக்கு அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை, திருகோணமலை தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் முகக்கவசம் அணியாது வீதிகளில் நடமாடிய 25 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட கட்டாய அன்டிஜன் பரிசோதனையில் எவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை. பொதுச் சுகாதாரப் பிரிவினர் குறித்த நபர்களை எச்சரிக்கை செய்து வீடுகளுக்கு செல்ல அனுமதித்தனர். (ரி5-40)

# வாடகைக்கு விடப்பட்ட கடைகளுக்கும் சபையே செலுத்துகிறது மின் கட்டணம்

## வருமான இழப்பு என்று உறுப்பினர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜன.9

அதிகாரிகளின் அசமந்தப்போக்கால், பிரதேச சபையால் கட்டி வாடகைக்கு விடப்பட்டுள்ள வர்த்தக நிலையங்களுக்கு கான மின் கட்டணத்தை சபையே செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் சபைக்குக் கிடைக்கும் வருமானத்தில் பாதிப்பு ஏற்படுகிறது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் பொதுச்சந்தையில் 10 கடைகளைக் கட்டி வாடகைக்குக் கொடுத்துள்ளது. வாடகைக்கு விடப்பட்டு ஒரு வருடத்துக்கு மேலாகியும் கடைகளுக்கு தனித்தனி மின்மானி பொருத்தப்படவில்லை. இதனால் மின் கட்டணத்தை பிரதேச சபையே செலுத்தி வருகின்றது. இந்த நிலை தொடர்பில் பிரதேச சபையின் இரண்டாம் வட்டார உறுப்பினர் க.அச்சுதன் சபையின் மாதாந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டியும், அதிகாரிகளின் அசமந்தப் போக்கால் மின்மானிகள் பொருத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. இது பற்றி தவிசாளரின் கவனத்துக்குக் கொண்டுவந்த உறுப்பினர், கடைகளுக்கு தனித்தனி மின்மானியை விரைவாக பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தவிசாளரைக் கோரியுள்ளார்.

சபைக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளதை ஏற்றுக் கொண்ட தவிசாளர், தற்போது நான்கு கடைகளுக்கான மின்மானி பொருத்துவதற்கு மின்சார சபை நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்றும், மிகுதிக் கடைகளுக்கான மின் மானிகளையும் விரைந்து பொருத்தித் தருவதற்கு மின்சார சபை முன்வந்துள்ளது என்றும் தெரிவித்தார். (ஐ-115)

# கனடாவின் இலங்கைத் தூதராக போர் குற்றச்சாட்டுள்ளவர்

*ஏற்க வேண்டாமென கோரிக்கை*

கொழும்பு. ஜன.9
போர்க் குற்றச்சாட்டுக்கு உள்ளான ஒரு நபரை தமது நாட்டுக்கான இலங்கைத் தூதுவராக ஏற்க வேண்டாம் என உள்ளூர் செயற்பாட்டுக் குழுவொன்று கனேடிய பிரதமரிடம் வலியுறுத்தியுள்ளது.

ஸ்ரீலங்கா விமானப் படையின் முன்னாள் தலைவர் எயார் சீப் மார்ஷல் சுமங்கல டயஸ் குறித்த பதவிக்கு ஏற்புடையவர் அல்ல என அறிவித்து அவரது நியமனத்தை மறுக்க தமிழ் உரிமைகள் குழு, கனேடிய அரசுக்கு பரிந்துரை செய்து கடிதம் எழுதியுள்ளது.

போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை ஆகியவற்றில் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டப்படும் எயார் சீப் மார்ஷல் சுமங்கல டயஸை கனடா அரசு விரும்பத்தகாத நபராக அறிவித்து, தூதுவராக தமது நாட்டுக்கு வருவதற்கு அனுமதி மறுக்க வேண்டும் என்று அந்தக் குழு கோரியுள்ளது. எயார் மார்ஷல் டயஸ் போர்க் குற்றங்கள் இழைத்ததற்கான ஆதாரங்கள் தம்மிடம் உள்ளன என்று தமிழ் உரிமைக் குழு கூறுகிறது. அது மாத்திரமின்றி பொதுநலவாய கோட்பாடுகளை மீறினார் எனவும் அவர் மீது குற்றச்சாட்டு முன்வைக் கப்பட்டுள்ளது. கனேடிய அரசு எயார் மார்ஷல் டயஸ் வருவதை விரும்பவில்லை. அவர் எமக்கு ஏற்புடையவரல்ல எனும் செய்தியை ஸ்ரீலங்கா அரசுக்குத் தெரிவிக்க வேண்டும் என அந்தக் குழு கோரியுள்ளது. (ப)

# இலங்கைக்கு இந்தியா உத்தரவிட முடியாது

*அமைச்சர் சரத் வீரசேகர*



**கொழும்பு, ஜன.9**
**இலங்கை சுயாதீனமான நாடு என்ற ரீதியில் இந்தியா இலங்கைக்கு யோசனைகளை மாத்திரம் முன்வைக்க முடியுமே தவிர, உத்தரவிட முடியாது என இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
தேசிய சொத்துக்களை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வெளிநாட்டினருக்கு விற்பனை செய்வதற்கு இடமளிக்கப்படாது. ஆகவே தேசிய சொத்துக்கள் ஏனைய தரப்பினருக்கு விற்பனை செய்யப்படுகின்றன என முன்வைக்கப்படும் கருத்துக்கள் குறித்து பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. மேலும், தேசிய சொத்துக்களை விற்பனை செய்யும் நடவடிக்கைக்கு எதிராகவே அரசு தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது. இதேவேளை, 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு வற்புறுத்துவதற்கு இந்தியாவுக்கு எந்தவொரு உரிமையும் கிடையாது. இலங்கை சுயாதீனமான நாடு என்ற ரீதியில் இந்தியா இலங்கைக்கு யோசனைத் திட்டங்களை மாத்திரமே முன்வைக்க முடியும். அதற்கு மாறாக இலங்கைக்கு எந்தவொரு விடயத்திலும் உத்தரவிட முடியாது - என்றார். (ப)

# பாடசாலைகளை துப்புரவாக்க பெற்றோருக்கு அழைப்பு

வவுனியா.ஜன.9
நாளைமறுதினம் திங்கட்கிழமை பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதனையடுத்து வடக்கு மாகாண பாடசாலைகளில் கற்றல் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைகளை அதிபர்கள் மேற்கொண்டு வருகின்றனர் .

இந்நிலையில் நீண்ட காலமாக பாடசாலை செயற்பாடுகள் இடம்பெறாததால் வகுப்பறைகள் மற்றும் பாடசாலையைச் சூழவுள்ள பகுதிகள் பெரும் பற்றைக்காடுகளாக காட்சியளிக்கின்றன. இதனையடுத்து மாணவர்களின் நன்மை கருதி பாட சாலையில் துப்புரவுப்பணி மேற்கொள்ளவதற்கு பெற்றோருக்கு வகுப்பாசிரியர்களால் அழைப்பு விடுக்கட்டுள் ளது.

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் பெற்றோரை இன்று சனிக்கிழமை காலை 8 மணியளவில் துப்புரவுப் பணிக்குரிய மண்வெட்டி மற்றும் கத்தி போன்ற உபகரணங்களுடன் பாடசாலைக்கு சமூகமளிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-110)


*கஞ்சா வைத்திருந்த*

# நாவற்குழி வாசிக்கு 10 ஆயிரம் தண்டம்

சாவகச்சேரி.ஜன.9
கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த நாவற்குழி வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றால் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி மதுவரி அலுவலகத்துக்கு கடந்த புதன்கிழமை கிடைத்த தகவலையடுத்து அங்கு சென்ற அலுவலர்கள், சந்தேகநபரை கைது செய்ததுடன், அவரிடமிருந்து 100 மில்லி கிராம் கஞ்சாவையும் மீட்டுள்ளனர்.

சந்தேகநபரை நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முற்படுத்தியபோது அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-9)



*இலங்கைக்கு வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர், ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்று முன்தினம் சந்தித்து பேசினார். உத்தியோகபூர்வ சந்திப்பாக அல்லாமல், தனிப்பட்ட சந்திப்பாகவே ஜெய்சங்கர் சந்திப்பை மேற்கொண்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ப)*

# சுதந்திரக் கட்சி மீது சந்தேகம்; அவதானத்துடனேயே இருப்போம்

*இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவிப்பு*

கொழும்பு, ஜன. 9
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்பாடுகள் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளன. கூட்டணியாகச் செயற்பட்டாலும் நாம் அவதானத்துடனேயே இருப்போம். மீண்டும் ஒக்ரோபர் அரசியல் நெருக்கடி போன்ற ஒன்று ஏற்படுவதற்கு ஒருபோதும் வாய்ப்பில்லை என்று இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசில் சுதந்திரக் கட்சி பங்காளிக் கட்சியாக உள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுன அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கி ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன என்ற கூட்டணியை உருவாக்கியது. கூட்டணியையும், அரசையும் பலவீனப்படுத்தும் வகையில் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் செயற்படுகிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினரும் சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் சுதந்திரக் கட்சியின் மீது மீண்டும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளன. அரசுக்குள் இருந்து கொண்டு அரசைப் பலவீனப்படுத்தும் செயற்பாடுகள் கடந்த காலங்களில் இவர்களால் முன்னெடுக்கப்பட்டுள் ளன. 2018 ஆம் ஆண்டு ஒக்ரோ பர் மாதம் நல்லாட்சி அரசில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி தற்போதைய அரசில் ஒருபோதும் ஏற்படாது. சுதந்திரக் கட்சியின் செயற்பாடுகளைத் தொடர்ந்தும் அவதானித்து வருகிறோம். கூட்டணியாகத் தொடர்ந்து இணக்கமாகச் செயற்படுவதே எமது எதிர்பார்ப்பாகும் - என்றார். (ப)

# விவசாயத்துறையில் பெரும் புரட்சிக்கு ஜனாதிபதி முடிவு

கொழும்பு, ஜன.9
இந்த நாட்டில் பயிரிடக்கூடியவற்றைப் பயிரிடுவதன் மூலம் வெளிநாட்டு விவசாயிகளுக்குச் செல்லும் பணம் எமது விவசாயிகளுக்கு கிடைக்க வழி செய்யப்படும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:

விவசாயத் துறையை முன்னேற்றுவதற்காக விவசாய சமூகத்துக்குத் தேவையான நீர், உரம், தொழில்நுட்ப அறிவை வழங்குவதற்கும் காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் அரசு முன்னுரிமை அளித்துள்ளது. இதற்காக 2021 வரவு - செலவுத் திட்டத்தில் பெரும் தொகை நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் உள்ளூர் ஒதுக்கீடுகளின் கீழ் திட்டமிடப்பட்டுள்ள 800 க்கும் மேற்பட்ட திட்டங்கள் நிறைவடையவில்லை. இந்தத் திட்டங்கள் அனைத்தையும் விரைவாக நிறைவுசெய்து மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டம் விவசாயிகள், மீனவர்கள் மற்றும் கைத்தொழில் துறையில்

ஈடுபட்டுள்ள கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதைச் செயல்படுத்த வெளிநாட்டு நிபுணர்கள் அல்லது ஆலோசகர்களின் உதவி தேவையில்லை. கிராமப்புற மக்களின் நலனுக்காக இதை நாட்டில் செயற்படுத்த வேண்டியது எமது அரச அதிகாரிகளின் பொறுப்பாகும் - என்றார். (ப)

## தற்காலிகமாக மூடப்படும் ஆணையகம், அமைச்சகம்

கொழும்பு, ஜன.9
இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணையகம் மற்றும் உயர் கல்வி அமைச்சகம் தற்காலிகமாக மூடப்பட்டுகின்றன என்று கல்வியமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணையகம் மற்றும் உயர் கல்வி அமைச்சகத்தில் நடத்தப்பட்ட 50 பி.சி.ஆர். பரிசோதனைகளில் பலர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ப)

## நேர்மையான எந்தவொரு அதிகாரியும் தண்டிக்கப்படாத வகையில் அரசமைப்பு

### பிரதமர் மஹிந்த ராஜபக்ச உறுதி

**கொழும்பு, ஜன.9**
**நேர்மையுடன் மக்களுக்கு சேவையாற்றிய எந்தவொரு அரச அதிகாரியும் தண்டிக்கப்படாத வகையில் அரசமைப்புப் பாதுகாப்பை பெற்றுத்தருவதற்கு எதிர்பார்க்கின்றோம் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது;
இந்த நாட்டின் அரச அதிகாரிகள் மக்களுக்காகச் சேவையாற்றியதால் அவர்களைச் சிறையில் அடைத்தமை நல்லாட்சி அரசு இந்த நாட்டுக்குச் செய்த பெரும் துரோகமாகும். ஒரு இயற்கை அனர்த்தத்தின்போது வெள்ள நிவாரணம் வழங்கியதற்காக முன்னாள் இராணுவத் தளபதியை எப்.சி.ஐ.டிக்கு அழைத்து விசாரணை நடத்தியிருந்தமை எனக்கு ஞாபகம் இருக்கின்றது. சில உடைகள் வழங்கியதற்காக ஜனாதிபதியின் செயலாளர், தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட ஆகியோர் சிறை வைக்கப்பட்டமை நீங்கள் அறிவீர்கள். நாம் இந்தநிலையை நன்கு உணர்ந்துள்ளோம். எனவே இதற்கு நாம் தீர்வொன்றை வழங்குகின்றோம். நேர்மையுடன் சேவையாற்றிய எந்தவொரு அதிகாரிக்கும் தண்டனை வழங்க முடியாது. எனவே அதற்குத் தேவையான அரசமைப்பு ரீதியான பாதுகாப்பை வழங்குவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்- என்றார். (ப)

## எழுதுமட்டுவாழ், கொடிகாமத்தில் பி.சி.ஆர். பரிசோதனை



சாவகச்சேரி, ஜன. 9
எழுதுமட்டுவாழ் பொலிஸ் சோதனைச் சாவடி மற்றும் கொடிகாமம் நகரப் பகுதியில் எழுந்தமான பி.சி.ஆர். பரிசோதனைகள் சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினரால் நேற்று மேற்கொள்ளப்பட்டன.

கிழக்கு, மேல், தென் மாகாணங்களிலிருந்து வந்த வாகனங்களின் சாரதிகள் மற்றும் உதவியாளர்கள் 28 பேருக்கும், வங்கி ஊழியர்கள், தனியார் பஸ்களின் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் உள்ளிட்ட 23 பேருக்கு மேற்கொள்ளப்பட்டன.

குறித்த பி.சி.ஆர். பரிசோதனைகளின் மாதிரிகள் ஆய்வுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. (ரி5-9)

## விமலுக்கு எதிராக ரிஷாத் முறைப்பாடு

கொழும்பு, ஜன.9
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக விசாரணை செய்து வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கைகள் வெளிவருவதற்கு முன்னர், அது தொடர்பில் தன்னை சம்பந்தப்படுத்தி குற்றம் சுமத்தியுள்ள அமைச்சர் விமல் வீரவன்ஸவின் நடவடிக்கைகள் குறித்து, அதே ஆணைக் குழுவில் மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் நேற்று முறைப்பா டொன்றை பதிவு செய்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர்;
விமல் வீரவன்ஸவின் இனவாதக் கருத்துக்களையும் அப்பட்டமான பொய்களையும், பிழையான குற்றச்சாட்டுக்களையும் கண்டிக்கின்றேன். அது தொடர்பில் ஜனாதிபதி ஆணைக் குழு உரிய கவனம் செலுத்தும். கொரோனாவால் உயிரிழந்த ஜனாஸாக்களை தொடர்ந்தும் எரிக்க வேண்டுமென்ற அரசின் நிலைப்பாடு அப்பட்டமான பழிவாங்கல் நடவடிக்கை ஆகும். இலங்கை வாழ் இருபது இலட்சம் முஸ்லிம்களும் இன்று துன்பத்துக்கு உள்ளாகியுள்ளனர். இதன் விளைவு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி, நாட்டையும் சமூகங்களையும் பாதிக்கும் - என்றார். (ப)

## தமிழ் கட்சிகள் இணக்கம்; மகிழ்ச்சிகரமான விடயம்

### சிவகரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.ஜன.9
கடந்த 11 ஆண்டுகளிலே முதன் முதலாக தமிழ்க் கட்சிகளும், சிவில் சமூகங்களும் ஒரு குடையின் கீழ் வந்து ஜெனிவா விவகாரத்தை எவ்வாறு கையாள்வது என்ற ஒரு முடிவுக்கு இணங்கி வந்துள்ளமை வரவேற்கத்தக்க மகிழ்வான விடயம் என தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்தார்.

தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டது தொடர்பில் வெளியான குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் இவ்வாறான ஒற்றுமை முயற்சியை நாங்கள் மேற்கொண்டு இருந்தோம். நல்ல நோக்கத்துக்காகச் செயற்படுகின்றவர்கள் மீது அவதூறான செய்திகளைப் பரப்பி தவறான கண்ணோட்டங்களில் கருத்துக்களைப் பகிரச் செய்வது சமூகச்செயற்பாட்டில் இருக்கின்ற எங்களுக்கு கவலையை ஏற்படுத்துகின்றன - என்றார் (ப)



## அறிமுகப்படுத்தப்பட்டது மருத்துவ காப்புறுதித் திட்டம்

கொழும்பு, ஜன.9
இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் 'நாகராஜ சாக்ய புத்ர ஞாதி' மருத்துவ காப்புறுதித் திட்டத்தை அறிமுகப்படுத்தும் நிகழ்வு நேற்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் அலரி மாளிகையில் இடம்பெற்றது.

புதிய காப்புறுதித் திட்டத்தை அறிமுகப்படுத்திய பிரதமர் மஹா சங்கத்தினருக்கு காப்புறுதிப் பத்திரங்களை வழங்கினார்.

இத்திட்டத்துக்கமைய மஹா சங்கத்தினரின் தாய், தந்தை, சகோதர சகோதரிமார் அரச மருத்துவமனை அல்லது தனியார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும்போது நாளொன்றுக்கு 1ஆயிரம் ரூபா வீதம் அதிகபட்சம் 15 ஆயிரம் ரூபா மற்றும் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் மருத்துவ பரிசோதனை அல்லது மருந்துகளுக்காக அதிகபட்சம் 25 ஆயிரம் ரூபா வரை செலுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ப)

## சடலங்கள் கட்டாய எரிப்பு; உடன் முற்றுப்புள்ளி வைக்குக!

### இளைஞர் அமைப்புக்கள் கோரிக்கை

கொழும்பு. ஜன.9
இலங்கையில் கொவிட் - 19 காரணமாக மரணிப்பவர்களை எரிப்பதில் தற்போது கடைப்பிடிக்கப்படும் கொள்கையை மீளத்திருத்திக் கொள்ளும்படி இலங்கை அரசைக் கேட்டுக்கொள்கிறோம் என்று நியாயத்துக்கான இளைஞர்கள் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது;
ஜனாஸாக்களை எரித்தல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதால் முஸ்லிம் மக்களும், கிறிஸ்தவ மக்களும் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகி அதிக மன அழுத்தங்களுக்கு ஆளாகியுள்ளனர். கொவிட் -19 காரணமாக மரணித்தவர்களை எரிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை என துறைசாந்தவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். இருக்கும் விஞ்ஞான பூர்வமான ஆதாரங்களை வைத்து கொவிட்-19 காரணமாக மரணிப்பவர்களை புதைக்க அனுமதிக்கலாம் என பலர் பகிரங்கமாக அறிவித்துள்ளனர்.

எனினும் கொவிட் - 19 காரணமாக மரணிப்பவர்களை எரிக்க வேண்டும் எனும் கட்டாயக் கொள்கையால் அதே சமூகங்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள குழப்பமானது எதிர்கால இலங்கைக்கு குந்தகமாக அமையலாம். எனவே விஞ்ஞான வல்லுநர்களின் அறிவுரைகளுக்கு அமைய கட்டாய எரித்தல், உடனடியாக நிறுத்தும் முடிவுகளை எடுக்குமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது. (ப)



## பொதுநோக்கு மண்டபம் விரைவில் பாவனைக்கு

பளை.ஜன. 9
பளை இந்திராபுரம் கிராமத்தில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட நிறுவனத்தினரால் அமைக்கப்பட்ட பொதுநோக்கு மண்டப வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

இக் கட்டடம் விரைவில் திறந்து வைக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

இந்தக் கிராமம் வெடிபொருள் அகற்றப்பட்டு கடந்த வருடம் முழுமையாக விடுவிக்கப்பட்ட நிலையில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-9)

## பண்டிகைக் காலக் கடன்களை சமுர்த்தி வங்கிகளில் பெறலாம்

கிளிநொச்சி, ஜன. 9
பண்டிகைக்கால கொடுப்பனவுகளை சமுர்த்தி வங்கிகளில் மக்கள் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கபட்டுள்ளது என்று கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் ரி.ஆரணி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;
தற்போது நாட்டில் கொவிட் 19 தொற்று அதிகரித்து காணப்படும் நிலையில் மக்களின் தொழில் வாய்ப்புக்கள் குறைவடைந்துள்ளன. இந்தக் காலம் பண்டிகைக் காலமாகக் காணப்படுவதால், அரச உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் சம்பள அளவுக்கு ஏற்ப கடன்களுடன் சாதாரண மக்களும் கடன் பெறக்கூடிய நிலை ஏற்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி சமுர்த்தி வங்கிகளில் அந்தக் கடனைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது - என்றார். (ஜ-6)

# பொங்கலுக்கு முன்னர் விடுவியுங்கள்

## கரைச்சி பிரதேச சபை தவிசாளர் கோரிக்கை

கிளிநொச்சி, ஜன.9

**பௌத்த மதத்தை நேசிக்கும் ஜனாதிபதி சிறையில்வாடும் அரசியல்கைதிகளை விடுதலை செய்து அவர்களை அவர்களது குடும்பங்களுடன் இணைக்க வேண்டும் என கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் கோரிக்கை விடுத்துள்ளார்.**




அரசியல் கைதிகளை விடுதலையை வலியுறுத்தி மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத்தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். தமது உறவுகள் சிறையில் வாடுகின்றபோது அவர்களின் குடும்பங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் அதிகமாகவே காணப்படுகின்றன.

இவ்வாறான நிலையில் பௌத்த மதம் எதைப் போதிக்கின்றதோ அதனை ஜனாதிபதியும் செய்ய வேண்டும். தைப்பொங்கலுக்கு முன்னராக அதனைச் செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். இதன்போது அரசியல் கைதியொருவரின் தாய் கருத்துத் தெரிவித்தபோது, நீண்ட காலமாக அரசியல் கைதிகளாக எமது பிள்ளைகள் சிறையில் வாடுகின்றனர். இந்த நிலையில் கொரோனா தொற்றும் அபாயமான நோயாக உருவெடுத்துள்ளது. நாளாந்தம் இறப்பது தொடர்பான செய்திகளே எமக்கு கிடைக்கின்றன. இந்த நோயைக் கருத்தில் கொண்டேனும் எமது பிள்ளைகளை விடுதலை செய்வதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (வ-6.214)

## நீரேந்துப் பரப்பு ஆக்கிரமிப்பு: அளவீட்டுக்குப் பரிந்துரைப்பு

முல்லைத்தீவு, ஜன.9

குளங்களின் நீரேந்துப் பரப்பை ஆக்கிரமித்து கட்டடங்கள் மற்றும் பயிர்ச் செய்கைகள் மேற்கொள்வது தொடர்பில் துணுக்காய் பிரதேச செயலாளரால் நில அளவைத் திணைக்களத்துக்கு அளவீட்டுக்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் துணுக்காய் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் த.பிரியதர்சினி தெரிவித்துள்ளதாவது,

துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள குளங்களில் குஞ்சுக்குளம், துணுக்காய்குளம், முருங்கன் குளம், அனிஞ்சியன்குளம், நமனங்குளம் ஆகிய ஐந்து குளங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு கட்டடங்கள் மற்றும் பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவை குளங்களின் நீரேந்துப் பகுதியில் நடைபெறுகின்றன. இதனைத் தடுப்பதற்கு பிரதேச செயலாளர் நில அளவைத் திணைக்க ளத்துக்கு குளங்களின் நீரேந்துப் பகுதிகளை அளவீடு செய்யுமாறு பரிந்துரைத்துள்ளார். குளங்களின் நீரேந்துப் பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் ஆக்கிரமிப்பு மேற்கொண்டுள்ளவர்கள் அடையாளப்படுத்தப்பட்டால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார். (வ-ரி2)



## கலைஞர்கள் கௌரவிப்பு

கிளிநொச்சி, ஜன.9

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கலைஞர் தரிசிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் உள்ள கலைஞர்களுடனான சந்திப்பு ஒன்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தால் நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்டது. இதன்படி, தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களது வீடுகளுக்கு மாவட்டக் கலாசார உத்தியோகத்தர், மாவட்ட மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலைஞர்கள் ஆகியோர் சென்று அவர்களைப் பாராட்டிக் கௌரவித்தனர். மேலும் கலைஞர்களுக்கு தலா 3000 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் என்பனவும் வழங்கப்பட்டன. (வ-21)

டெங்கு பரவும் சூழல்

## 10 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல்!!

வவுனியா, ஜன.9



டெங்கு பரவும் நிலையில் வீட்டுச் சூழலை வைத்திருந்த 10 பேருக்கு எதிராக சுகாதாரப் பரிசோதகர்களால் நேற்றுமுன்தினம் வவுனியா நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வவுனியாவின் பண்டாரிக்குளம், வைரவப்புளியங்குளம், குருமன்காடு உள்ளிட்ட நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் தொடர்ந்தும் இந்த டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுடன் இணைந்து, பொலிஸாரும், சிவில் பாதுகாப்பு குழுவினரும் இந்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போது வீடு வீடாகச் சென்று டெங்கு பரவும் இடங்களைச் சோதனையிட்டதுடன் டெங்கு பரவும் அபாயத்துடன் காணப்பட்ட வீட்டுக்கு உரிமையாளர்களுக்கு எதிராக நீதி மன்றத்தில் வழக்குப் பதிவு செய்தனர். இதன்போது பலருக்கு எச்சரிக்கைக் கடிதமும் வழங்கப்பட்டது.

அதன்படி 10 பேருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், 5 பேருக்கு 25 ஆயிரம் ரூபா வீதம் நீதிமன்றால் அபராதம் விதிக்கப்பட்டதுடன், ஏனைய 5 பேருக்கு எதிரான வழக்குகள் தவணையிடப்பட்டது.

மழையுடனான தற்போதைய காலப்பகுதியில் டெங்கு நுளம்பு பரவும் அபாயம் காணப்படுவதால் வடிகான்கள், வீட்டின் கூரைகளில் நீர் தேங்குவது, குளிர்தனப் பெட்டியின் பின்பகுதி என்பவற்றில் நீர் தேங்குதல் போன்றவற்றைத் தினசரி பார்வையிட்டு சுத்தம் செய்யுமாறும் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் பொதுமக்களுக்கு அறிவுறுத்தலும் வழங்கப்பட்டது. (ற-18)

## மரநடுகைத் திட்டத்தில் பலரும் கைகோர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன.9


யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட மாணவர் ஒன்றியத்தால் கிளிநொச்சி வளாகத்தில் ஒழுங்குபடுத்தப்படுகின்ற மரநடுகை திட்டத்துக்கு பல்வேறு தரப்பினரும் கைகொடுத்துள்ளனர்.

இதன்படி, சூழகம் அமைப்பின் செயலாளரும், வேலணை பிரதேச சபை உறுப்பினருமாகிய கருணாகரன் நாவலன், பசுமை இயக்க நிறுவுநர் பொ.ஐங்கரநேசன் ஆகியோரால் தலா 75 மரக்கன்றுகளும், விஞ்ஞான பீட மாணவர்களால் 40 மரக்கன்றுகளும், சட்ட மாணவர் சங்கத்தால் 25 மரக்கன்றுகளும் வழங்கப்பட்டுள்ளன என திட்டத்தின் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (வ-இ)



## கள் ஏற்றுமதி ஆரம்ப நிகழ்வு

தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியினரால் உற்பத்தி செய்யப்பட்ட போத்தலில் அடைக்கப்பட்ட 'கள்' அவுஸ்திரேலியா நாட்டுக்கு அனுப்பப்படவுள்ளது. இதன் ஆரம்ப நிகழ்வு, கடந்த 3 ஆம் திகதி கொத்தணித் தலைவர் க.துரைசிங்கம் தலைமையில் வடிசாலையில் இடம்பெற்றது. நிகழ்வில் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் கிரிஷாந்த பத்திராஜ் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ந-9)



2021 ஆம் ஆண்டுக்கான கல்விச் செயற்பாடுகள் நாளை மறுதினம் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் துப்புரவுப் பணிகளை கிளி.கிங்ஸ் விளையாட்டு கழகத்தினர் நேற்று முன்னெடுத்தனர். (ஐ-222)

## இன்றைய நாள்



**மேடம்:** எந்த விஷயத்தையும் மிகுந்த கவனத்துடன் செய்ய வேண்டும். பழைய கடன்கள் வசூலாகும். பணியாளர்களுக்கு மனஅழுத்தம் தீரும். உதவிகள் செய்து பாராட்டு பெறுவீர்கள்.

**இடபம்:** கடந்த சில நாளாக இருந்து வந்த மனஉளைச்சல் தீரும். என்றைக்கோ உழைத்த பலனை இப்போது பெற்று மகிழ்வீர்கள். பெற்றோரின் ஆசையை நிறைவேற்ற முயற்சி செய்வீர்கள்.

**மிதுனம்:** பயணத் திட்டங்களில் ஏற்படும் திடீர் மாற்றம் நன்மை தரும். நண்பர்களுடன் மனம் விட்டுப் பேசி பிரச்சினைக்கு தீர்வு காணுங்கள். தேவையானதை வாங்கி கொடுப்பீர்கள்.

**கடகம்:** செலவுக்கேற்ற வருமானம் வரும். தேவையற்ற வாதம் வேண்டாம். மனைவிக்கு ஆடை, ஆபரணங்கள் வாங்கித் தந்து மகிழ்விப்பீர்கள். பயணங்கள் செல்வீர்கள்.

**சிம்மம்:** ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். கோயில்களுக்கு செல்ல தடை வரலாம். அதிகாரிகளின் பாராட்டுதலை பெற்று மகிழ்ச்சி அடைவீர்கள். சேமிப்பை அதிகரிப்பது நல்லது.

**கன்னி:** திருமணம் தொடர்பான முயற்சியில் சாதகமான பலன் உண்டு. அதிகாரியை அனுசரித்துச் செல்வது முன்னேற்றத்துக்கு நல்லது. சக ஊழியர்கள் ஒத்துழைப்பு உண்டு..

**துலாம்:** உறவினர் இடையே இருந்து வந்த கருத்து வேறுபாடு நீங்கும். மனவருத்தம் தீரும். தம்பதிகளிடையே இருந்த பிரச்னை மறையும். மனவருத்தங்கள் நீங்கும்.

**விருச்சிகம்** பெண்கள் கொடுத்த வாக்கை காப்பாற்றி நிம்மதி காண்பார்கள். எதிர்பார்த்த பணம் வரும். நண்பர்களைப் புரிந்து கொள்ளுங்கள். திட்டமிட்ட விஷயங்கள் செயல் வடிவம் பெறும்.

**தனுசு** நீங்கள் முன்பு செய்த செயல்கள் இப்போது நன்மை தரும். மற்றவர்கள் பிரச்னைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் சிறு சிறு மன வருத்தங்கள் வந்து நீங்கும்.

**மகரம்** பிள்ளைகள் மூலம் சில செலவுகள் ஏற்படக்கூடும். நீங்கள் எதிர்பார்த்து காத்திருந்த நல்ல செய்தி வந்து சேரும். உறவுகளால் நன்மை உண்டு. தந்தையின் உடல் நலம் தேறும்.

**கும்பம்:** பழக்கமில்லாத பொழுது போக்குகளில் ஆர்வம் ஏற்படும். உடல்நலம் பற்றிய விஷயத்தில் அலட்சியம் காட்டாமல் கவனிப்பீர்கள். முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மீனம்:** குடும்பத்துக்காகச் செலவுகள் செய்து அன்பைப் பெறுவீர்கள். நல்ல மனம் கொண்ட உறவினர்களால் சந்தோஷம் கூடும். வீண் விவாதங்கள் வேண்டாம். நம்பிக்கை அதிகரிக்கும்.

# அரசியல் கைதிகளை விடுவிக்க விரைந்து ஆவன செய்யுங்கள்!!

### *சர்வமதத் தலைவர்களிடம் உறவுகள் கோரிக்கை*

**யாழ்ப்பாணம், ஜன.9**

**கொரோனாத் தொற்றால் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள அரசியல் கைதிகளை மனிதாபிமான அடிப்படையில் இத்தருணத்திலாவது விடுதலை செய்ய வேண்டும் என அரசியல் கைதிகளின் உறவினர்கள் சர்வமதத் தலைவர்கள் முன்னிலையில் கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்துள்ளனர்.**

ஒன்றுபட்டு எமது உறவுகளை சிறை மீட்போம் எனும் தொனிப் பொருளில் குரலற்றவர்களின் குரல் அமைப்பினரால், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்திய சர்வமத கலந்துரையாடலொன்று யாழ்ப்பாணம் தியாகி அறக்கொடை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே அவர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர். இக் கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சர்வமத பிரதிநிதிகள் மற்றும் அரசியல் கைதிகளின் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர். மேலும் சிறையிலுள்ள எமது உறவுகளை விடுவிக்க மதத் தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். அரசியல்கைதிகளை விடுதலை செய்யக் கோரிய ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்றும் மதத் தலைவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (வ-20)



# அரசியல் கைதிகளுக்காக சர்வமத வழிபாடுகள்

மன்னார், ஜன.9

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை வேண்டி வடக்கு கிழக்கில் சர்வமத வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. நீண்டகாலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 14ஆம் திகதி வரை பிரார்த்தனை வாரம் அனுஷ்டிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைவாக நேற்றைய தினம் வடக்கு கிழக்கில் மன்னார் மட்டக்களப்பு திருகோணமலை ஆகிய இடங்களில் உள்ள இந்து ஆலயங்களிலும், கிறிஸ்தவ ஆலயங்களிலும் பொங்கல் பொங்கியும், செப வழிபாடுகளுடனும் விடுதலை வேண்டிப் பிரார்த்தனைகள் நடைபெற்றன. (வ-213)



# சுற்றாடலைப் பாதிக்கும் தனியார் நிறுவனத் திட்டம்

### *குரல் எழுப்பக் கோருகிறார் பேராயர் மல்கம் கர்தினால்*

கொழும்பு, ஜன.9

தனியார் நிறுவனமொன்று சுற்றாடலுக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் மேற்கொள்ளும் திட்டத்துக்கு எதிராக கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை குரல் கொடுத்துள்ளார்.

முத்துராஜவெல சுற்றாடல் கட்டமைப்புக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் இந்த நிறுவனம் செயற்படுவதற்கு எதிராக குரல் எழுப்புமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

முத்துராஜவெலவைப் பாதுகாக்கும் அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று நடந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார். தனியார் நிறுவன மொன்று முத்துராஜவெல பகுதியில் 700 ஏக்கர் நிலப் பரப்பில் தன்னிச்சையாக புதிய திட்டமொன்றை முன்னெடுத்துள்ளது எனவும் இந்தத் திட்டத்தால் இந்தச் சுற்றாடல் கட்டமைப்புக்கு பெரிய பாதிப்புக்கள் ஏற்படும் சாத்தியம் உள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (ற-இ)

# மட்டு. போதனா மருத்துவமனைக்கு இதய வடிகுழாய் உபகரணங்கள்

### *சாணக்கியன் எம். பி. தெரிவிப்பு*

மட்டக்களப்பு, ஜன.9

மட்டக்களப்பு போதனா மருத்துவமனை இருதயவியல் பிரிவின் ஆய்வகத்துக்கு வழங்கப்படவிருந்த இதய வடிகுழாய் உபகரணங்கள் விரைவில் மருத்துவமனைக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் புதிய இருதயவியல் பிரிவின் ஆய்வகத்துக்கு இரு கிழமைகளில் வழங்கப்படவிருந்த இதய வடிகுழாய் மற்றும் ஆஞ்சியோகிராம் வைத்திய இயந்திர உபகரணங்களை, களுத்துறை மாவட்டத்துக்கு மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனின் தலையீட்டைத் தொடர்ந்து, குறித்த உபகரணங்களை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு வழங்க வேண்டிய செயற்பாடுகளை உடன் நடைமுறைப்படுத்த வேண்டுமென பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

மக்களின் இப் பிரச்சினை விரைவில் தீர்க்கப்படும். எமது கட்சி மற்றும் எனது செயல்பாடுகள் அனைத்தும் எமது மக்கள் சார்ந்ததாகவே இருக்கும்- என்றார். (ந-150)

## மக்கள் நலனை மேம்படுத்த புதிய ஆணைக்குழு

கொழும்பு, ஜன.9
தற்போதைய சட்ட விதிகளைப் பொதுமக்களுக்கு இலகுவானவையாக்க 18 பேர் கொண்ட ஆணைக் குழுவொன்றை ஜனாதிபதி நியமித்துள்ளார்.
இந்த ஆணைக்குழுவின் இணைத் தலைவர்களாக முன்னாள் ஜனாதிபதியின் செயலாளரும் ஜனாதிபதியின் தலைமை ஆலோசகருமான லலித் வீரதுங்க மற்றும் ஜோன் கீல்ஸ் குழுமத்தின் தலைவர் கிரிஷான் பாலேந்திரா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆணைக்குழுவின் செயாலாளராக ஓய்வு பெற்ற அமைச்சின் செயலாளர் ஜி.எஸ் விதானகே நியமிக்கப்பட்டுள்ளார். இந்தக் குழுவில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் தமக்கு வழங்கப்பட்டுள்ள பணிகளைச் செய்ய 90 நாள்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளன.
அத்துடன் இவ் ஆணைக்குழுவுக்கு அதன் செயல்பாடுகளைச் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அவசியமான பணிப்புரை வழங்க அதிகாரம் உள்ளது என வும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-இ)

# சுதந்திரக் கட்சியின் தலைவர் நானே!!!

***சந்திரிகா அதிரடி அறிவிப்பு***



**கொழும்பு, ஜன. 9**
**நானே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர். மைத்திரிபால சிறிசேன என்பவர் சட்டவிரோதமாகவே அந்தப் பதவியை வகிக்கின்றார் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.**

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிறுவுநரான முன்னாள் பிரதமர் எஸ்.டிபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவின் 122 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, காலி முகத்திடலில் உள்ள அவரின் சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்திய பின்னர், ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே சந்திரிகா அம்மையார் மேற்கண்டவாறு கூறினார்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு தற்போது அரசியல் பயணம் என்று ஒன்று கிடையாது. கட்சி சரியான வழியில் பயணிக்கின்றதா அல்லது திசைமாறி பயணிக்கின்றதா என கூறமுடியாது.
சுதந்திரக் கட்சிக்கு பொதுஜன பெரமுனவால் அநீதி இழைக்கப்படுகின்றது என்று இன்றுதான் சிலர் கூறுகின்றனர். ஆனால் முன்கூட்டியே இது குறித்து நான் எச்சரிக்கை விடுத்திருந்தேன்.
தற்போது கட்சிக்கு தலைவர் என ஒருவர் இருக்கிறார். அவர் சட்டவிரோதமாகபே அப்பதவியை வகிக்கின்றார்.
சுதந்திரக்கட்சி யில் இருந்து நான் விலகவில்லை. ஆயுள்கால உறுப்பினரான நான்தான் தற்போது கட்சியின் தலைவர். எனினும், எந்தவொரு கூட்டத்துக்கும் எனக்கு அழைப்பு விடுக்கவேண்டாம் என சிறிசேன அறிவுறுத்தியுள்ளார். நான் ஐக்கிய தேசியக்கட்சி பக்கம் செல்லவில்லை. சிறிசேனதான் 5 தடவைகள் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையகம் சென்றார். ரணிலை சேர் என்று விளிப்பதற்கு வாய்ப்பு வேண்டும் என கேட்டார். சுதந்திரக்கட்சியை மொட்டு கட்சியிடம் விற்பனை செய்தவர்தான் சிறிசேன, என்றார். (ஒ,44)





## 396 பயனாளிகளுக்கு நாற்றுப் பொதிகள்

முல்லைத்தீவு, ஜன.9
கிராமிய மட்டத்தில் விவசாயச் செய்கையை ஊக்குவிக்கும் வகையில் 396 பயனாளிகளுக்கான மரக்கறி நாற்றுப் பொதிகள், பழமரக்கன்றுகள் மற்றும் சேதனத் திரவ பசளைகள் என்பவை திருச்சபைகளின் நிதி அனுசரணையில் வழங்கப்பட்டன.
ஒட்டுசுட்டான் விவசாயப் பண்ணை முகாமையாளர் கி.கீர்த்திகன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக மாகாண விவசாய பிரதிப் பணிப்பாளர் பூ.உகநாதன் கலந்துகொண்டு விவசாயிகளுக்கான நடுகைப் பொருள்களை வழங்கி வைத்தார்.
இதன்போது பயனாளிகளுக்கு வீட்டுத் தோட்டங்களை விருத்தி செய்யும் நோக்கிலான பயிற்சிகளும் வழங்கப்பட்டன. (வ-19)

## ரயில் மோதியதில் குடும்பஸ்தர் சாவு

மட்டக்களப்பு, ஜன.9
மட்டக்களப்பு ஏறாவூர்ப் பிரதேசத்தில் புகையிரதம் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என ஏறாவூர்ப் பொலிஸார் தெரிவித்தனர்.
கொரோனா அச்சுறுத்தலால் நிறுத்தப்பட்டிருந்த மட்டக்களப்பு ரயில் சேவை சுமார் இரண்டரை மாத காலத்தின் பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் முதலாவது ரயில் வண்டியிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-150)

### கிழக்கு மாகாணத்தில்
## இடமாற்றங்கள் அனைத்தும் தற்காலிகமாக நிறுத்தம்

திருகோணமலை, ஜன.9
கிழக்கு மாகாணத்தில் 2021 ஆம் ஆண்டின் அரச இணைந்த சேவைக்கான வருடாந்த இடமாற்றங்கள் உடன் அமுலுக்கு வரும் வகையில் இடை நிறுத்தப்பட்டுள்ளன.
எதிர்வரும் 18 ஆம் திகதியிலிருந்து இடம்பெறவிருந்த மாகாண இடமாற்றங்கள் அனைத்தும் ஆளுநரின் பணிப்புரைக்கு அமைய தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.
மாகாணத்தில் நிலவும் கொவிட் 19 நிலைமை காரணமாக பல இடங்கள் முடக்கப்பட்டு வருகின்றன. இதனால் இடமாற்றங்களை முறையாகச் செய்வதற்கு முடியாத காரணத்தால் அனைத்து இடமாற்றங்களும் நிறுத்தப்பட்டுள்ளன என்று கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் பணிப்புரை விடுத்துள்ளார். (ஐ-இ)

## சுற்றுலாத்துறை அபிவிருத்தியூடாக இளைஞர்களுக்கு தொழில்வாய்ப்பு

மட்டக்களப்பு, ஜன.9
ஜனாதிபதியின் வழிகாட்டலில் கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதோடு பிரதேச இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என கிழக்கு மாகாண ஆளுநர் திருமதி.அனுராதா ஜகம்பத் தெரி வித்தார்.
வாகரை சல்லித்தீவு கடற்கரைப் பகுதியைப் பார்வையிடும் நிகழ்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதனூடாக அந்நிய செலாவணியை பெற்றுக்கொள்வதோடு, சுற்றுலாமையங்களை அண்டியுள்ள இளைஞர் யுவதிகளுக்கு அதிக வருமானத்தை ஈட்டும் வகையில் தொழில் முயற்சிகளை ஏற்படுத்தும் திட்டங்களும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ளன எனத் தெரிவித்தார். (வ-150)



## தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் விசேட தரத்துக்குப் பதவி உயர்வு!

யாழ்ப்பாணம், ஜன.9
வடக்கு மாகாண அரச திணைக்களங்களில் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் காணப்பட்ட தொழில்நுட்பச் சேவை விசேட தர வெற்றிடத்துக்கு ஏற்ப, தரம் 1 இல் கடமையாற்றிய தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு விசேட தரத்துக்கு பதவி உயர்வு வழங்குவதற்கான விபரங்கள் மாகாணப் பிரதிப் பிரதம செயலாளர் செயலகத்தால் கோரப்பட்டுள்ளன.
மாகாண உள்ளூராட்சித் திணைக்களம், வீதி அபிவிருத்தித் திணைக்களம், கட்டடங்கள் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கல்வித் திணைக்களம் போன்றவற்றில் 2008 2018 காலப் பகுதியில் தரம் 1 இல் கடமையாற்றிய மற்றும் கடமையாற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு திறமை அடிப்படையில் விசேட தரத்துக்கு பதவி உயர்வு வழங்குவது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
அந்த வகையில், இந்த உத்தியோகத்தர்களது சுயவிபரக் கோவைகளைப் பூரணப்படுத்தி எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கவேண்டும் எனவும் பிரதிப் பிரதம செயலாளர் அறிவித்துள்ளார். (ற-9)

# ஜனவரி மாத ராசிபலன்கள்





துலாம்

வாழ்க்கையில் முன்னேற எதிர் நீச்சல் போடத் தயங்காத துலாம் ராசியினரே!

நீங்கள் அனைவரையும் சரிசம மாக மதிப்பவர்கள். இந்த மாதம் வீண் அலைச்சல் இருந்தாலும் பணவரவு நன்றாக இருக்கும். முயற்சிகளில் வெற்றி கிடைப்பதில் இருந்து வந்த தாமதம் நீங்கும். மனதில் தெளிவு உண்டாகும். ஆக்கபூர்வமாக எதையும் செய்யும் எண்ணம் தோன்றும். அவசர முடிவுகளைத் தவிர்ப்பது நல்லது.

தொழில் வியாபாரம் தொடர்பான கடிதப் போக்குவரத்தால் அனுகூலம் உண்டாகும். தொழில், வியாபாரம் விரிவுபடுத்துவது தொடர்பான திட்டங்கள் தோன்றும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பயணங்களால் அலைச்சலைச் சந்திக்க வேண்டி இருக்கும். மேல் அதிகாரிகள் கூறுவதை மறுத்துப் பேசாமல் அனுசரித்துச் செல்வது நன்மையைத் தரும். சக ஊழியர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். மேலிடத்துடன் இருந்து வந்த கசப்பு உணர்வு நீங்கும்.

குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பம் நீங்கும். தெளிவான முடிவுகள் மூலம் நன்மை உண்டாகும். கணவன் மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்து எதையும் மனம் விட்டுப் பேசிச் செய்வது நல்லது. பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். குடும்ப வருமானம் அதிகரிக்கும். குடும்பத்துக்குத் தேவையான வசதிகளைப் பெருக்குவீர்கள்.

**பெண்களுக்கு:** எதிலும் ஆக்கபூர்வமாக செய்து வெற்றி காண்பீர்கள். மனதில் இருந்த குழப்பம் நீங்கி தெளிவு உண்டாகும்.

**கலைத்துறையினருக்கு:** நெருக்கமானவர்களுடன் இனிமையாகப் பேசி பொழுதைக் கழிப்பீர்கள். தொழில் சிறப்பான முன்னேற்றம் பெறும். மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும்.

**அரசியல் துறையினருக்கு** சிறப்பாகப் பணிபுரிந்து பாராட்டுப் பெறுவார்கள். பயணங்களால் மகிழ்ச்சியும் ஆதாயமும் கிடைக்கும். நிலம், வீடு, வாகனம் வாங்கும் வாய்ப்புகள் கை கூடி வரும். நீதிமன்ற வழக்குகளிலிருந்து விடுபடுவீர்கள். வேதாந்த விஷயங்களில் நாட்டம் அதிகரிக்கும். **மாணவர்கள்** ஆசிரியர்கள் கூறுவதைக் கேட்டு அதன்படி நடப்பதும், பாடங்களில் இருக்கும் சந்தேகங்களை உடனுக்குடன் கேட்டு தெரிந்து கொள்வதும் வெற்றிக்கு உதவும்.

**சித்திரை 3ஆம், 4ஆம் பாதம்:**
இந்த மாதம் உங்களது உடைமைகளை கவனமாக பார்த்துக் கொள்வது நல்லது. வாகனங்களில் செல்லும்போது கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் மெத்தனமான போக்கு காணப்படும். சரக்குகளை அனுப்பும்போதும் பாதுகாத்து வைக்கும் போதும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேல் அதிகாரிகளிடம் அனுசரித்துச் செல்வது நல்லது. செய்யும் வேலை பற்றி மனதில் திருப்தியற்ற எண்ணம் உண்டாகும். குடும்பத்தில் இருப்பவர்களின் செயல்கள் உங்களுக்கு மனவருத்தத்தைத் தருவனவாக இருக்கலாம். கவனமாகக் கையாள்வது நல்லது.

**சுவாதி:**
இந்த மாதம் பிள்ளைகளுடன் அனுசரித்துச் செல்வது நன்மையைத் தரும். கணவன் மனைவிக்கிடையே திடீர் மனவருத்தம் அடையும்படியான சூழ்நிலை வரலாம். கவனம் தேவை. உங்களது பொருள்களை கவனமாக பாதுகாத்துக்கொள்வது நல்லது. வீண் பிரச்சினைகளில் தலையிடாமல் ஒதுங்கிவிடுவது நன்மைதரும். மாணவர்களுக்கு கல்வியில் அதிக கவனம் செலுத்துவது நன்மை தரும். கவனமாக அடுத்தவர்களிடம் பழகுவது நல்லது. வீண் அலைச்சல் குறையும். வேலைப்பளு நீங்கும். புதிய இடங்களில் திறமைகளை வெளிப்படுத்தத் தயங்க வேண்டாம்.

**விசாகம் 1ஆம், 2ஆம், 3ம் பாதம்:**
இந்த மாதம் விரும்பாத இடமாற்றம் உண்டாகலாம். குறிக்கோள் இன்றி வீணாக அலைய நேரிடும். செலவும் அதிகரிக்கும். சகோதரர்கள் மூலம் நன்மை உண்டாகும். மனோதைரியம் கூடும். புதிய நட்பு கிடைக்கும். எதிலும் எச்சரிக்கையாக இருப்பது நன்மைதரும். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத தடங்கல்கள் வரலாம். பணவரத்து இருந்தாலும் தேவை அதிகரிக்கும். புதிய வாடிக்கையாளர்கள் கிடைக்கப் பெறுவீர்கள். அவர்களால் நன்மையும் உண்டாகும்.

# பரிவிருத்த திரிகோணாசனம்

வாரம் ஓர் ஆசனம் 7


'பரிவிருத்த' என்றால் குறுக்கு வாட்டு என்ற பொருள் கொண்டு இதன் உச்ச நிலையில் உடலானது குறுக்குவாட்டு முக்கோணம் போல் தோற்றமளிப்பதனால் இப்பெயர் வந்தது.

**செய்(படி)முறைகள்:**

1. முதுகை நிமிர்த்தி நேராக நிற்கவும். (தடாசனம்)
2. வலக்காலை இடது காலிலிருந்து ஒரு மீற்றர் தூரம் வரை அகலமாக வைக்கவும்.
3. கைகள் இரண்டையும் மூச்சை இழுத்தவாறு பக்கவாட்டுக்கு கிடை மட்டத்துக்கு சமமாக உயர்த்தவும். உயர்த்துகையில் உள்ளங்கைகள் தரையை நோக்கியவாறு இருக்க வேண்டும்.
4. கால்களை அசைக்காது இடுப்பை மாத்திரம் இடப்புறமாக 90பாகைக்குத் திருப்பவும்.
5. மூச்சை வெளிவிட்டவாறு இடுப்பை முன்நோக்கி வளைத்து வலது கையை இடதுகால் பெருவிரலில் ஊன்றியவாறு உயர்த்தப்பட்ட இடது கைவிரல்களின் நுனிப் பகுதியில் பார்வையைத் திருப்பவும். இந்த நிலையில் சாதாரணமாகச் சுவாசிக்க வேண்டும். - உச்ச நிலை
6. மெதுவாக மூச்சை இழுத்துக் கொண்டு மேலெழும்பி உடம்பு வலப்புறம் நோக்கியிருக்க இரு கைகளையும் தோள் மட்டத்துக்கு இணையாக நீட்டியிருக்க வேண்டும்.
7. பின்னர் உடம்பை முன்னோக்கித் திருப்பவும். பின்னர் மூச்சை வெளிவிட்டவாறு கைகளைக் கீழே விடவும்.
8. வலக்காலைத் தூக்கி இடக்காலின் அருகில் வைத்தவாறு ஆரம்ப நிலைக்கு வரவும்.

குறிப்பு : இதேபோல் மாற்றுப் பயிற்சியாக மறுபுறமாகவும் (இடக்கால்) செய்தல் வேண்டும். ஒவ்வொரு பக்கமும் தலா மூன்று தடவைகள் செய்தல் வேண்டும். உடல் உபாதைகள் உள்ளவர்கள் தகுந்த குருவின் ஆலோசனையுடனேயே செய்தல் வேண்டும். மேலதிக விளக்கங்கள் தேவைப்பட்டால் அடியேனது 0771041455 என்ற அலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

**பலன்கள் :**
முதுகுத் தண்டு வடம் முறுக்கேறி வலிமை பெறும். முன்னாண் நரம்புகள் தூண்டப்பட்டு செயலூக்கம் பெறுகின்றன. வயிற்றுப்பகுதியிலுள்ள உள்ளுறுப்புக்கள் அழுத்தப்பட்டு ஊக்கமளிக்கப்படுகின்றது. இடுப்புப் பகுதிகளிலுள்ள தேவையற்ற கொழுப்புக்கள் மற்றும் ஊளைச் சதைகள் கரைக்கப்பட்டு உடல் சீரான அமைப்பைப் பெறும். இடுப்பு மூட்டுக்கள் வலிமையடையும். பெரும்பாலான வயிற்றுக் கோளாறுகளுக்கு நல்லது. உடலுக்கு தேவையான சக்திச் சமநிலை கிடைக்கும்.



தொடரும்...

ஸ்ரீ. நதிபரன் (யோகா போதனாசிரியர்)

### மீண்டும்...

சட்டவிரோதம் என்றும் அவர்களைக் கைதுசெய்ய நேரிடும் என்றும் பொலிஸார் அவர்களை அச்சுறுத்தினர்.
அதையடுத்து மாணவர்கள் பல்கலைக் கழக வளாகத்துக்குள் இருந்து வெளியேறினர். இன்று காலை பல்கலைக் கழகம் திறக்கப்பட்டவுடன்தூபியைமீளஅமைக்கும் நடவடிக்கைகளைமுன்னேடுப்போம்என்று மாணவர்கள் தெரிவித்தனர். (எ-26)

### தலைகாட்டாத...

பல்கலைக் கழகத்துக்கு முன்பாகக் கூடியிருந்த மாணவர்களும், மக்கள் பிரதிநிதிகளும் பொதுமக்களும் தூபி இடித்தழிப்புத் தொடர்பாக துணைவேந்தருடன் பேச வேண்டும் என்று அழைத்தனர். எனினும் துணைவேந்தர் வெளியே வரவில்லை.
நள்ளிரவு தாண்டியும் துணைவேந்தருடன் பேச வேண்டும் என்ற கோரிக்கையுடன் அவர்கள் வீதியில் காத்திருந்தனர். எனினும் அவர் வெளியே வரவில்லை.
துணைவேந்தர் சந்திப்பதை தவிர்ப்பதால் இந்தச் சம்பவம் அவரது நெறிப்படுத்தலில் நடந்திருக்கும் என்ற சந்தேகம் ஏற்படுகின்றது என்று அங்கிருந்த மக்கள் விசனித்தனர். (எ-26,ரி4)

### சட்டவிரோத.....

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்துக்குள் இருந்த முள்ளிவாய்க்கால் நினை வேந்தல் தூபி நேற்று இரவோடு இரவாக இடித்தழிக்கப்பட்டது. அது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே துணைவேந்தர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
சட்டவிரோதமான எந்தவொரு விடயத்தையும் வைத்திருக்க முடியாது. இப்போது எங்களுக்கு இந்தத்தூபி பற்றி எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டது. சட்டபூர்வம் இல்லாது அமைக்கப்பட்டிருந்த என்னவாக இருந்தாலும், ஒரு அத்திபாரக் கல்லை போடுவதாக இருந்தாலும் உரிய அமைச்சிடம் அனுமதி பெற வேண்டும். 'சட்டபூர்வம் இல்லாது அமைக்கப்பட்ட விடயங்கள் அகற்றப்பட வேண்டும் . அகற்றிவிட்டு எங்களுக்கு அறியத் தர வேண்டும் .எங்களுக்கு இந்தத் தகவல் புலனாய்வு மூலம் கிடைத்தது. இவற்றை (தூபியை)நீங்கள் பல்கலைக் கழகத்தில் வைத்திருக்க முடியாது' என்றும் எமக்குக் கடிதங்கள் வந்தன. அதை எனக்குக் கீழ் இயங்குகின்ற பிரிவுகளுக்கு அனுப்பியிருந்தேன். அவர்கள் இன்று (நேற்று) நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.
இதில் சிலர் அரசியல் இலாபம் தேடுகின்றார்களே தவிர, மற்றப்படி அது ( தூபி) எப்படியோ அகற்றப்பட வேண்டிய விடயம் தான், அதை வைத்துக் கொண்டிருக்க முடியாது.
சின்னச் சின்ன நெருடல் இருக்கின்றது, அதைப் பிறகு பார்ப்போம். முன்னால் கூடியுள்ளவர்கள் ஆர்வக்கோளாறில் வந்திருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் கதைப்பதும் சட்டவிரோதமானவை. அவர்கள் தாமாகப் போகாவிட்டால் நாம் அவர்களை போகச் செய்வதற்குரிய வழிகளைக் கையாள்வோம் என்றார். (எ-26)

### அல்வாய்...

மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் பி.சி.ஆர். சோதனைகள் மேற்கொள்ளவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
பருத்தித்துறை அல்வாய் பகுதியைச் சேர்ந்தவர் கடந்த மாதம் 19ஆம் திகதியிலிருந்து கடந்த 6ஆம் திகதி வரையில் வீட்டாருடன்தங்கியிருந்துள்ளார். கண்ணிவெடி அகற்றும் பிரிவில் வேலை செய்யும் இவர் வேலைக்காக மூதூர் சென்றுள்ளார். அங்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் சோதனையிலேயே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
இவரது இரு பிள்ளைகளும் பருத்தித்துறையிலுள்ள ஆரம்பப் பாடசாலையில் கல்வி பயில்கின்றனர். பாடசாலையில் கடந்த 5ஆம், 6ஆம், 7ஆம் திகதிகளில் நடத்த வகுப்புகளுக்கு அவர்கள் சென்று வந்துள்ளனர்.
இதனையடுத்து அந்தப் பகுதிக்குப் பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட்டால், பாடசாலையின் 4 ஆசிரியர்கள், 32 மாணவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.
இந்தப் பாடசாலையின் அதிபர், புலோலியில் கண்டுபிடிக்கப்பட்ட தொற்றாளர் சென்று வந்த தொலைபேசி நிலையத்துக்குச் சென்றமையால் ஏற்கனவே தனிமைப்படுத்தலில் உள்ளார். (ஒ-9,26,159)

### முள்ளிவாய்க்கால்..

இறுதிப்போரில் இறந்தவர்களை நினைவு கூரும் வகையில் பல்கலைக் கழக மாணவர்களால் இந்த நினைவு முற்றம் அமைக்கப்பட்டது. இந்தக் கட்டுமானப் பணிகளை நிறுத்த வேண்டும் என்று உயர் கல்வி அமைச்சும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் 2018ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் பல்கலைக் கழக நிர்வாகத்துக்கு அறிவித்திருந்தன. அதன்பின்னர் இறுதிக் கட்டத்தில் இருந்த கட்டுமானப் பணிகள் மாணவர்களால் நிறைவு செய்யப்பட்டு நினைவு முற்றத்தில் நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.
அதன்பின்னர் அந்த நினைவு முற்றம் தொடர்பில் எந்த சர்ச்சையும் ஏற்பட்டிருக்காத நிலையில் நேற்று இரவு திடீரென அந்த நினைவிடம் ஜே.சி.பி. இயந்திரம் கொண்டு இடித்தழிக்கப்பட்டுள்ளது. குறித்த தூபி அமைந்திருந்த இடத்தில் இருந்த மின்விளக்குகள் யாவும் அணைக்கப்பட்டு, வெளியில் எவரும் அறியா வண்ணம் இந்த இடித்தழிப்பு நடந்துள்ளது.
அதேவேளை, சில நாள்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் வந்த உயர் இராணுவ அதிகாரிகள் இந்த நினைவிடத்தைப் பார்த்துச் சென்றனர் என்றும், அதன்பின்னரேநினைவிடத்தை அகற்றும்நடவடிக்கைகள் மும்முரமாகின என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.
நினைவுமுற்றம் இடித்தழிக்கப்படும் தகவல் அறிந்ததும் மாணவர்களும், மக்கள் பிரதிநிதிகளும் பல்கலைக் கழகத்துக்கு முன்பாகக் கூடினர். அவர்கள் உட்செல்ல அனுமதிக்கப்படவில்லை. அதன்பின்னர் அந்தப் பகுதியில் பொலிஸாரும், அதிரடிப்படையினரும் குவிக்கப்பட்டனர். அதனால் இந்தச் செய்தி எழுதப்படும் வரை ( நேற்று நள்ளிரவு வரை) அங்கு பதற்றநிலைமை தொடர்ந்தது. (எ-26,ரி4)

### தயாசிறிக்கு...

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் பற்றிக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு உற்பத்தி இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகரவே கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளார்.
அவர் ஹிக்கடுவை தனியார் ஹோட்டலில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.
தயாசிறி ஜயசேகரவுக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டமை அரசியல்வாதிகள் மத்தியில் பெரும் அச்சநிலையை ஏற்படுத்தியுள்ளது.
இந்தநிலையில், இவருடன் நெருக்கமாகப் பழகிய அரசியல்வாதிகளை தனிமைப்படுத்தும் நடவடிக்கையில் சுகாதாரப் பிரிவினர் களமிறங்கியுள்ளனர். (ஒ-22)

### யாழ்ப்பாணத்தில்...

யாழ்ப்பாணம் கல்கலைக் கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் 5 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த 3 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. அவர்கள் மருதனார் மடம் சந்தைக் கொரோனாக் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.
கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில், வீதி அபிவிருத்தி அதிகார சபையில் பணியாற்றும் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது. இவர்கள் மருதங்கேணி மற்றும் உடுவிலைச் சேர்ந்தவர்கள்.
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் இருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டது. இவர்கள் மன்னார், எருக்கலம்பிட்டியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-26)

### வவுனியாவில்...

த்தப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்தில் முதல்முறை ஒரே தடவையில் அதிக தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். இந்தக் கொத்தணியில் மேலும் பலருக்கு தொற்று இருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.
வவுனியா பட்டாணிச்சூரைச் சேர்ந்த கர்ப்பிணிப் பெண் தொற்றாளராக முதலில் அடையாளம் காணப்பட்டிருந்தார். அவரின் உறவினரான கிளிநொச்சி வளாகத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவரும் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டிருந்தார். அத்துடன் அவரின் குடும்ப உறுப்பினர்கள் 5 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.
அதையடுத்து பட்டாணிச்சூர் பகுதி முடக்கப்பட்டது. வவுனியா நகர்ப் பகுதிகளில் கடைகள் வைத்திருப்பவர்கள் பலரும், அங்கு பணிபுரிபவர்கள் பலரும் பட்டாணிச்சூரைச் சேர்ந்தவர்கள். இவர்களில் பெரும்பாலானோர் முடக்கத்தை மீறி வர்த்தக நிலையங்களில் பணிபுரிந்துள்ளனர். வவுனியா நகர் என்பதால் பெருமளவானோர் இந்த வர்த்தக நிலையங்களுக்கும் வந்து சென்றுள்ளனர்.
பட்டாணிச்சூர் பகுதியைச் சேர்ந்தவர்களுடன் தொடர்புடைய வியாபார நிலையங்களில் பணிபுரிபவர்கள் 204 பேர் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்டு கடந்த புதன் கிழமை பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களின் பரிசோதனை முடிவுகள் நேற்று மதியம் வெளியாகின. அதில் 54 பேருக்கு தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
இந்தக் கொத்தணியின் தொற்றாளர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கக்கூடும் என்று கூறப்படுகின்றது. அதேவேளை, இதுவரையில் வவுனியாவை முடக்குவது தொடர்பில் எந்த உத்தியோகபூர்வ அறிவிப்பும் வெளியிடப்படவில்லை. (ஒ-5,26,18,110)

### உணவு...

சங்கானையில் நடந்துள்ளது.
க.பார்த்தீபன் (வயது42) என்பவரே உயிரிழந்துள்ளார். நேற்றுக் காலை உணவாக தோசையை உண்டுகொண்டிருந்த போது அவருக்கு திடீரென விக்கல் ஏற்பட்டது. அதனையடுத்து அவர் மங்கி வீழ்ந்துள்ளார். அவர் உடனடியாக சங்கானை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர்.
உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (எ-26,25)

### அரசியல்....

அமைச்சர் தினேஷ் குணவர்த்தன பேச்சு நடத்தியுள்ளார். இது தொடர்பில் அடுத்த வாரம் விரிவான சந்திப்பொன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளையும் அவர் முன்னெடுத்துள்ளார்.
இது தொடர்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா தெரிவித்ததாவது-
கடந்த செவ்வாய்க்கிழமை மாலை தொலைபேசியூடாக என்னைத் தொடர்பு கொண்ட வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன, தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பில் நேரில் பேசுவோம் என்று கூறினார்.
அவரின் கருத்தை ஏற்றுக்கொண்ட நான், பேச்சை உடன் ஒழுங்கு செய்யுங்கள் என்று அமைச்சரிடம் தெரிவித்தேன். இந்தத் தகவலை நான் உடனே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், மற்றும் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோரிடம் தெரிவித்திருந்தேன்.
நாடாளுமன்றத்தில் அமைச்சரை நேரில் சந்தித்து இது தொடர்பில் உரையாட வேண்டும் என்று அவர்களைக் கேட்டுக் கொண்டேன். அதற்கமைய அவர்கள் இருவரும் நேற்று (நேற்றுமுன்தினம்) வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவை நாடாளுமன்றத்தில் சந்தித்தனர்.
சிறைச்சாலைகளில் கொரோனாத் தொற்றில் இருந்து தமிழ் அரசியல் கைதிகளின் உயிர்களைப் பாதுகாக்கும் வகையில் அவர்களுக்கு மன்னிப்பு வழங்கி அரசு உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் அல்லது அவர்களைப் பிணையிலாவது விடுவிக்க வேண்டும் என்று அமைச்சரிடம் எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டனர்.
தமிழ் அரசியல் கைதிகளைப் பிணையில் விடுவிப்பது தொடர்பில் அரசு அதிக கவனம் செலுத்தியுள்ளது எனவும், அது பற்றி ஆராய்ந்து விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் அமைச்சர் கூறினார்.
அதற்கான முன்னேற்பாடாக அடுத்த வாரம் தனது அமைச்சில் தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் விரிவான பேச்சுக்கு ஒழுங்கு செய்யப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.
இன்று (நேற்று) என்னைத் தொலைபேசியில் மீண்டும் தொடர்புகொண்ட அமைச்சர் தினேஷ் குணவர்தன, தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பில் சில நிமிடங்கள் பேசினார். இந்த விவகாரம் தொடர்பில் அடுத்த வாரம் தனது அமைச்சில் விரிவான பேச்சுக்கு ஒழுங்கு செய்யப்படும் என்றும், அதற்கான திகதியை அறிவிப்பேன் என்றும் அவர் என்னிடமும் கூறினார்.
அரசின் நடவடிக்கைக்கமைய தமிழ் அரசியல் கைதிகள் பிணையிலாவது விடுவிக்கப்பட வேண்டும் என்பது எமது கோரிக்கையாகும். இதை அமைச்சர் தினேஷிடம் இன்று (நேற்று) நான் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்தேன்-என்றார். (எ-22)

## கற்கள் விற்பனைக்கு

கட்டடம் கட்டுவதற்கான
**கொங்கிறீற் கற்கள்**
விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
076 345 8905 (பளை)

## மணமகள் தேவை

மிகவும் உயர் பதவியிலுள்ள கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த சிம்மராசி 9 இல் செவ்வாய் மணமகனுக்கு பொருத்தமான படித்த அழகிய மணமகள் தேவை.
077 397 1841, 077 891 3745

## பணிப்பெண் தேவை

வேலைக்கு செல்லும் பெற்றோர் தமது ஒரு வயது நிரம்பிய பெண்பிள்ளையை பராமரிப்பதற்குப் பணிப்பெண்ணை தேடுகின்றனர். வேலை நேரம் 8.30am-5pm திருநெல்வேலி பிரதேசத்தை அண்டியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
T.P இல. 076 822 4353

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் பலசரக்கு வர்த்தக நிலையமொன்றிற்கு கீழ்வரும் வேலைகளுக்கு பெண் வேலையாட்கள் தேவை. யாழ் மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
*Computer Billing
*Accounts
தொடர்பு: 077 419 5015

## வீடு விலைக்கு தேவை

சுன்னாகத்தில் இருந்து
5 கி.மீ சுற்றளவுக்குள்
வீடு தேவை.
077 044 0570

## சிறுநீரகம் தேவை

B,O குருதி வகையை சேர்ந்த
சிறுநீரகம் தேவை.
தொடர்பு: 076 239 9874


# யூனியன் கல்லூரி பெற்றோருக்கு இன்று கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 9

பாடசாலையை மீள ஆரம்பிப்பது தொடர்பாக தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பெற்றோர்களுக்கான கூட்டம் கல்லூரி மண்டபத்தில் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது. எனவே தரம் 6,7,8,9 வகுப்புக்களின் பெற்றோர்கள் முற்பகல் 9 மணிக்கும் தரம் 10 ,11,12,13 வகுப்புகளுக்குரிய பெற்றோர்கள் முற்பகல் 11 மணிக்கும் கொவிட் 19 சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றித் தவறாது கலந்துகொள்ளுமாறு கல்லூரி அதிபர் ரி.வரதன் கேட்டுக்கொண்டுள்ளார். (கு-39)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 02 . 10 . 1946
மறைவு 10 . 12 . 2020

### சின்னக்குட்டி இரட்ணம் (பட்டு)

வண்ணமாய் நம் குடும்பம் வாழ்ந்திடவே உழைத்து
உண்மையாய் உத்தமனாய் ஊருடன் கூடி வாழ்ந்து
எண்ணமாய் எப்போதும் எம்மையே சுழன்றுவர
இடை நடுவே எமை விட்டு ஏகினீரே!- தலைவா
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

கொல்லங்கலட்டி, கல்லுப்பிடுங்கி.
என்றும் உங்கள் நினைவில் சண்முகராசா குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 09 . 05 . 1952
மறைவு 08 . 01 . 2021

### திருவாளர் பொன். தர்மேந்திரன் (சிம்மக்குரலோன்)

**(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகஸ்தர்-கல்வித் திணைக்களம் தென்மராட்சி, முன்னாள் செயலாளர் பழைய மாணவர் சங்கம் - யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், உறுப்பினர் செம்மணி இந்து மயான அபிவிருத்திச் சபை, அறிவிப்பாளர், நிர்வாக உறுப்பினர், வெயில் உகந்த விநாயகர் ஆலயம், நல்லூர் பூதவராயர் ஆலயம், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழக முன்னாள் செயலாளரும்)**

ஸ்ரான்லிக் கல்லூரி வீதியைப் பிறப்பிடமாகவும், செல்லர் வீதியினை வசிப்பிடமாகவும் கொண்ட திருவாளர் பொன்னுத்துரை தர்மேந்திரன் அவர்கள் நேற்று (08.01.2021) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை- நவமணி தம்பதியரின் அன்பு மருமகனும், சுகிர்தாதேவியின் அன்புக் கணவரும், சைலஜா (சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்-யாழ்ப்பாணம்), சாமினி (Trilliom முன்பள்ளி), தனுஜா (உதவிச் செயலாளர், உள்நாட்டலுவல்கள் அமைச்சு-கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெகன் (கட்டட ஒப்பந்தகாரர்), மயூரதன் (அக்ஷயா என்ரபிறைசஸ்-திருநெல்வேலி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுந்தரலிங்கம் (கொழும்பு), இராஜேஸ்வரி, புவனேஸ்வரி, பத்மநாதன் (ஜேர்மனி), கருணாதேவி, தர்மகுலசிங்கம் (ஜேர்மனி) மற்றும் காலஞ்சென்றவர்களான யோகராசா (கனடா), சிவகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், வசந்தரூபி (கனடா), குகனேஸ்வரன் (ஓய்வுபெற்ற பிரதிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர்), பத்மாவதி (ஜேர்மனி), சந்திரவதனி (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான சித்திராதேவி, இராசையா, ஈஸ்ரா (ஜேர்மனி) மற்றும் இந்திராதேவி (கொழும்பு), யோகநாதன் (இத்தாலி), சிவரஞ்சினி (கொழும்பு), மனோகரநாதன் (இத்தாலி), நிர்மலாதேவி (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான பத்மநாதன், பத்மாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், அக்ஷயா, தஸ்விகா, அபிஷன் (புனித ஜோன் பொஸ்கோ பாடசாலை மாணவர்கள்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.01.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
T.P: 077 6921421, 077 699 1030, 077 6964559.

## மரண அறிவித்தல்

### இந்திரா சிதம்பரநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியை)

**தோற்றம் : 18.11.1939** **மறைவு : 07.01.2021**



மலேசியாவை பிறப்பிடமாகவும் நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம், வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்டிருந்த இந்திரா சிதம்பரநாதன் அவர்கள் 07.01.2021 வியாழக்கிழமையன்று இயற்கை எய்தினார்.

இவர் காலஞ்சென்ற சின்னம்மா சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற நில அளவை அத்தியட்சகர்) அவர்களின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற சோமசுந்தரம் சிதம்பரநாதன் (உதவி பொறியியலாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சோமசுந்தரம் (சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்) பொன்னமா ஆகியோரின் மருமகளும், Dr. ஸ்கந்தன் (Trouto, Canada) அவர்களின் அன்புத் தாயாரும், பத்மினி (Trouto, Canada) அவர்களின் அன்பு மாமியாரும், கவிஷஜன் அவர்களின் அன்பு அப்பம்மாவும், காலஞ்சென்ற சண்முகப்பிரியா மற்றும் பரமேஸ்வரா, இராமச்சந்திரன், விமலா, கமலா ஆகியோரின் அன்பு சகோதரியும், கனகநாயகம், காலஞ்சென்ற தையல்நாயகி, தனலக்சுமி, வைத்தியநாதன், சிவகுமார், சிவனேஸ்வரி ஆகியோரின் அண்ணியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை A.F. Raymonds மலர்ச்சாலையில் 09.01.2021 சனிக்கிழமை மதியம் 1.00 முதல் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, 10.01.2021 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00-4.00 மணியளவில் பொரளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**0777 430 855, 077 386 7642**
**தகவல்: குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 21 . 08 . 2000
விண்ணில் 22 . 12 . 2019



Tuttlingen Germany ஐ பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

### செல்வன் ரசிக்குமார் ரதுசன்

திதி:ஏகாதசி

**அன்பின் ரதுசனே அழியாத ஓவியமே
நீ எட்டமுடியாத தொலைவு சென்று
ஆண்டு ஒன்றல்ல ஓராயிரம் ஆகலாம்
காலங்கள் விடைபெறலாம்
நெஞ்சில் பதிந்த நினைவுகள் என்றென்றும்
எம்மைவிட்டு நீங்காது
கலையாத நினைவுகளுடன்
உதிரும் கண்ணீருடன்
உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**

11, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.
சித்தப்பா குடும்பம் (லண்டன்) மாமாமார், மாமிமார், மைத்துனர்கள், அப்பம்மா.

## விபத்தில் சிறுவன் காயம்

கொடிகாமம், ஜன. 9

சைக்கிளும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் சிறுவன் காயமடைந்து சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவம் கொடிகாமம் சந்தி சுற்றுவளைவில் நேற்றுப் பிற்பகல் இடம் பெற்றது. கொடிகாமம் பெரிய நாவலடியைச் சேர்ந்த 12 வயதுச் சிறுவனே காயமடைந்தார். கொடிகாமம் பொலிஸார் விசாரணை நடத்தினர். (து159)

## பளையில் 27 பேருக்கு பி.சி.ஆர். சோதனை

கிளிநொச்சி,ஜன. 9

பளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 27 பேருக்கு நேற்று பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

வெளிநாடு செல்வதற்காக கொழும்பு சென்று அங்கிருந்து பரிசோதனை செய்து, முடிவுகள் வர முன்னர் தப்பி வந்த 11 பேரில் 10 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. இந் நிலையில் பளை இத்தாவில் பகுதியிலும் ஒருவர் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார். அவர் உள்ளிட்ட 27 பேரின் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பரிசோதனைக்காக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டன.

இயக்கச்சி பகுதியில் உள்ள சில வர்த்த நிலையங்களில் பணிபுரிவோர், எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள், நோர்த் லங்கா நிறுவனத்தில் பணிபுரியும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த ஊழியர்கள் உள்ளிட்டவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. (ஐ-6)

## மாணவர்களுக்கு கற்றல் உபகரணம்

சாவகச்சேரி, ஜன. 9

தென்மராட்சி பிரதேசத்தில் கல்வி பயிலும் பெற்றோரை இழந்த, மற்றும் பொருளாதார நிலையில் பின்தங்கிய 150 மாணவர்களுக்கு வேள்ட் விஷன் லங்கா நிறுவனத்தினர் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் பாடசாலை கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப் பைகளை நேற்றுக் கையளித்தனர்.

இந்தப் பொருள்கள் சமூக இடைவெளிகளைப் பேணும் வகையில் தைப்பொங்கலின் பின்னர் கட்டம், கட்டமாக ஏனைய மாணவர்களுக்கும் வழங்கப்படவுள்ளன. (ரி5-9)


## தொழில் முயற்சியாளர்கள் 200 பேருக்கு நிதி உதவி

யாழ்ப்பாணம்,ஜன.9

கொவிட் 19 நோய்த் தொற்றால் வியாபார நடவடிக்கைகள் பாதிக்கப்பட்ட தொழில் முயற்சியாளர்களுக்கு ஹற்றன் நஷனல் வங்கியின் நிதி வழங்கும் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை கிளை வாடிக்கையாளர்களுக்கு காசோலைகள் நேற்று வழங்கப்பட்டன.

ஹற்றன் நஷனல் வங்கியின் நீண்டகால வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் இந்த நிதியுதவித் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 200 பேருக்கு இந்த நிதி உதவி வழங்கப்படுகிறது. இதில் வடபிராந்தியத்தில் 28 தொழில் முயற்சியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந் நிலையில் பருத்தித்துறை கிளை வாடிக்கையாளர்களுக்கு உதவித் தொகைக்கான காசோலை வழங்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ஐ-26)




# உக்ரைன் பணியாளர்களாலேயே மூன்றாவது அலை பரவியது

## தொற்றுநோய்ப் பிரிவு தெரிவிப்பு



**கொழும்பு,ஜன.9**

**கடந்த செப்டம்பர் மாத ஆரம்பத்தில் நாட்டுக்கு வருகை தந்த உக்ரைன் விமானப் பணியாளர்களே இலங்கையில் கொரோனா மூன்றாம் அலை பரவியதற்கான பிரதான காரணம் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோய்ப் பிரிவு மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.**

அவர்கள் சீதுவையில் அமைந்துள்ள ஹொட்டலில் தங்கியிருந்தனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவின் பணிப்பாளர், விசேட மருத்துவ நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

குறித்த விமானப் பணியாளர்கள் நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு முன்னர் விருந்துபசாரம் ஒன்று இடம்பெற்றுள்ளது எனவும், அதில் வெளியிலிருந்தும் ஆள்கள் பங்கேற்றிருந்தனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-இ)

## நீங்கள் வாக்காளரா?

### இணையத்தில் உறுதி செய்யலாம்



யாழ்ப்பாணம்,ஜன.9

கடந்த 2020 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் தேருநர் ஒருவராக பதிவுசெய்து கொள்வதற்காக சிபாரிசு செய்துள்ள நபர்களின் பெயர்களை www.elections.gov.lk என்ற இணையத்தளத்தில் பரீட்சித்துக்கொள்ள முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

யாரேனும் ஒருவரின் பெயர் குறித்த இடாப்பில் பதிவு செய்வதற்கு சிபாரிசு செய்யப்படவில்லை எனில் கிராம அலுவலர் அல்லது 0112860031, 0112860032 மற்றும் 0112860034 என்ற தொலைபேசி இலக்கங்களின் ஊடாக தொடர்புகொண்டு, எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் தேருநர் இடாப்பில் பெயரை உட்சேர்த்துக் கொள்வதற்கான உரிமைக்கோரலொன்றை மேற்கொள்ள முடியும் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஐ-இ)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

சாவகச்சேரி ஜன. 9

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும்.

குறித்த குழுக் கூட்டத்தில் 50 பேர் மட்டும் கலந்துகொள்ளும் வகையில், பிற்பகல் 1 மணி தொடக்கம் 2.30 மணி வரை விவசாயம்,நீர்ப்பாசனம், கடற்றொழில் ஆகியவை தொடர்பிலும், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் 3.30 மணி வரை சுகாதாரம்,கல்வி, வீடமைப்பு ஆகியவை தொடர்பிலும், பிற்பகல் 3.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை கூட்டுறவு, போக்குவரத்து, இடர்கால முகாமைத்துவம் ஆகியவை தொடர்பிலும் மூன்று கட்டங்களாக இக் கூட்டம் நடை பெறுமென பிரதேச செயலர் சு.உஷா தெரிவித்தார். (ரி5-9)

*பாடசாலை மாணவர்களுக்கு*

## போக்குவரத்து வசதிகள் வழங்குமாறு கோரிக்கை



கிளிநொச்சி, ஜன. 09

நடந்து செல்கின்ற மாணவர்களுக்கு போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மற்றும் வலயக் கல்வி கூட்டங்களில் பாடசாலை அதிபர்கள் மற்றும் பெற்றோர் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 33 ஆயிரத்துக்கும் இற்கு மேற்பட்ட மாணவர்கள் உள்ளனர். இம் மாணவர்களில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பாடசாலைக்கு நடந்து செல்லும் நிலைமை காணப்படுகிறது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் இவ்விடயம் தெரியப்படுத்தப்பட்டு பாடசாலை மாணவர்களை ஏற்றி இறக்கக் கூடிய வகையில் அரச, தனியார் பஸ் சேவைகள் இடம்பெற வேண்டும் என தெரிவிக்கப்பட்டும் அவை நடைமுறைப் படுத்தப்படவில்லை.

முகாமாலையிலிருந்து பளை மத்திய கல்லூரிக்குச் செல்கின்ற மாணவர்களும், தட்டுவன்கொட்டி, உமையாள்புரம் ஆகிய பகுதிகளிலிருந்து பரந்தன் இந்து மகா வித்தியாலயத்துக்கும், திருமுறிகண்டியிலிருந்து கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம், கிளிநொச்சி மகா வித்தியாலயம், கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரிக்கு ஆகிய பாடசாலைகளுக்கு மாணவர்கள் வருவதில் போக்குவரத்து நெருக்கடி காணப்படுகின்றது.

நகரப் பாடசாலைகளிலே இந்நிலைமை என்றால் கண்டாவளை, வட்டக்கச்சி, இராமநாதபுரம், கோணாவில், அக்கராயன், முக்கொம்பன், வன்னேரிக்குளம், ஜெயபுரம், பூநகரி, பள்ளிக்குடா, நாச்சிக்குடா, முழங்காவில், கிராஞ்சி, வேரவில், கல்லாறு என கிராமப் புறங்களில் பெருமளவு மாணவர்கள் பாடசாலை நாள்களில் குறைந்தது 5 கிலோ மீற்றர் தூரம் பாடசாலைக்கு நடந்து வருகின்றனர். இது தொடர்பாக அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர் வேண்டுகோள் விடுத்தனர். (ரி5-ரி2)

# இருபத்தாறாவது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
05 • 06 • 1928



உதிர்வு
09 • 01 • 1995

"உதயகிரி" பலாலி தெற்கு, வயாவிளான்

**அமரர்**

## செல்லத்துரை உலகநாதன் (ஜே.பி.)

(ஓய்வுபெற்ற கிராமசேவையாளர்)

எல்லாரும் வாழ வேண்டும்
இல்லார்க்கு உதவவேண்டும்
உழைப்பினால் உயரவேண்டும்
உத்தமராய் இருக்கவேண்டும்
என்று சொல்லி வாழ்ந்து காட்டிய
எங்கள் தெய்வத் தந்தையே
என்றும் தொழுதிருப்போம்.

மக்கள், மருக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

தோற்றம்
05 - 06 - 1943



மறைவு
07 - 01 - 2021

## இராசையா சண்முகேஸ்வரலிங்கம்

யாழ். தாவடியைப் பிறப்பிடமாகவும், வன்னியசிங்கம் வீதி, இணுவில், சென்னை பழவந்தாங்கல் ஆகிய இடங்களை'வதிவிடமாகவும் கொண்ட இராசையா சண்முகேஸ்வரலிங்கம் சென்னையில் தனியார் மருத்துவ மனையில் 07.01.2021 வியாழக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசயைா - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பையா - கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், மலர்விழி (கனடா), இராஜினி (பிரான்ஸ்), தயானி (பிரான்ஸ்), சுபாகரன் (பொறியியலாளர் - சென்னை) ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமேஸ்வரிலிங்கம், மகேஸ்வரலிங்கம் (டென்மார்க்), ஞானாம்பிகைதேவி (சுசிலா), சிவஞானேஸ்வரலிங்கம் மற்றும் காலஞ்சென்றவர்களான கணேஸ்வரலிங்கம், தியாகேஸ்வரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கணேசலிங்கம், சறோஜினிதேவி, தனலட்சுமி, நடராசா, காலஞ்சென்றவர்களான லதா, சரஸ்வதிதேவி, செல்வரத்தினம், இராசலட்சுமி, தேவநாயகம் ஆகியோரின் மைத்துனரும், அருட்செல்வன், கிருபானந்தன், துளசிதரன் ஆகியோரின் மாமனும், ரட்ணவி, ரக்ஷன், அஜிகரன், அனு ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.01.2021) ஞாயிற்றுக் கிழமை சென்னையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
**இ.பரமேஸ்வரலிங்கம்**
**(சகோதரன்)**
**021 222 5955,**
**075 098 0210**

தாவடி தெற்கு,
கொக்குவில்.

### சர்ச்சைக்குரிய வழக்கு திங்கள்

கல்முனை, ஜன. 9


கொரோனாத் தொற்றால் இறந்தார் என்று கூறப்பட்டு, கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த மருத்துவ மனையில் வைக்கப்பட்டுள்ள சாய்ந்தமருதைச் சேர்ந்த முஹம்மட் இஸ்மாயீல் முஹம்மட் ஹனிபா என்பவரின் பி.சி.ஆர். அறிக்கை நீதிமன்ற உத்தரவின் பேரில் நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை விசாரணைக்கு எடுக்கப்படும் என்று நீதிமன்றம் தெரிவித்தது.

அந்த பி.சி.ஆர். அறிக்கையை வெளிப்படுத்தக் கோரியும் அந்த அறிக்கையின் பிரகாரம் குறித்த நபருக்கு கொரோனாத் தொற்றில்லை என்று உறுதிப்படுத்தப்படுமாயின் அவரது ஜனாஸாவை குடும்பத்தினரிடம் ஒப்படைக்க உத்தரவிடுமாறும் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது (த-இ)

# மரண அறிவித்தல்

## நடனராணி சிவநாயகம்

தோற்றம் 27.01.1939
மறைவு 07.01.2021



காரைநகர் புதுறோட்டைப் பிறப்பிடமாகவும் கோலாலம்பூர் மலேசியாவை வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது மூத்த தம்பி ஒழுங்கை மானிப்பாயில் வசித்து வந்தவருமான திருமதி நடனராணி சிவநாயகம் கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குணநாயகம் முத்தாபரணம் தம்பதியரின் (காரைநகர் புதுறோட்) மூத்த மகளும், காலஞ்சென்ற சிவநாயகம் சிவசம்பு (இறப்பர் ஆராய்ச்சி நிலையம்-மலேசியா, காரைநகர் சந்தம்புளியடி) அவர்களின் அன்பு மனைவியும், திரு. குணநாயகம் இராசநாயகம் (முன்னாள் அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி) திருமதி இந்திராணி ஜெயக்குமாரன் (முன்னாள் உப அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி ராஜேஸ்வரி ராசநாயகம், வணபிதா ஜெயக்குமாரன் ஆகியோரின் மைத்துனியும், டாக்டர் டிலானி ஜெயக்குமாரன், டாக்டர் டினேஸ் ஜெயக்குமாரன் (கணக்காளர்) டிலக்சன் ஜெயக்குமாரன் ஆகியோரின் பெரியம்மாவும், திருமதி ராஜினி லைமன், திரு. ரிறோன் லைமன், திரு.ராஜ்மோகன் ராசநாயகம், திருமதி டாக்டர் றோசினி ராஜ்மோகன் திரு. ராஜ்குமார் ராசநாயகம், திருமதி டாக்டர் சிரோன் ராஜ்குமார், திருமதி வைதேகி டினேஷ், திருமதி பிரியாந்தி டிலக்சன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ரஸ்மித்தா லைமன், திமொத்தி லைமன், ரித்திக்கா ராஜ்மோகன், ரச்சித்தா ராஜ்மோகன், கேசியா டினேஷ், கிறேசியா டினேஷ், நிதன் டிலக்சன், நிலானி டிலக்ஷன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் உடல் இறுதி அஞ்சலிக்காக அன்னாரின் இல்லத்தில் நாளை (10.01.2021) ஞாயிற்றுக்கிழமை வைக்கப்பட்டு பிற்பகல் 3 மணிக்கு மானிப்பாய் கிறிஸ்தவ கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தொடர்பு: **077 754 3368**

தகவல்:
**சகோதரி இந்திராணி ஜெயக்குமாரன்.**

**குறிப்பு:-** தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு அஞ்சலி செலுத்த வருவோர் பரிந்துரைக்கப்பட்ட சமூக இடைவெளி மற்றும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.




## மரண அறிவித்தல்



தோற்றம் 13.07.1967 — மறைவு 02.01.2021

### வீரசிங்கம் சிற்சபேசன்

அரசடி வீதி இருபாலையை பிறப்பிடமாகவும் Essan ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் சிற்சபேசன் கடந்த 02.01.2021 சனிக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் - சாவித்திரி தம்பதியரின் ஏக புத்திரனும், காலஞ்சென்றவர்களான இராஜலிங்கம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், ரஜனியின் அன்புக் கணவரும், விதுசன், நிசியந், சரண்ஜித் ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌரி, காலஞ்சென்ற கேதீஸ்வரி மற்றும் நளாயினி (லண்டன்), ரோகினி, ராகினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (11.01.2021) திங்கட்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சகோதரிகள்

# INVITATION FOR BIDS
# TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction works in the schedule below.

| | Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate BOQ of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1. | Construction of New Store near RHO Quarters | 500.00 | 63,000.00 | 91 | 3.11 | C8 |
| 2. | Construction of Stores at Hospital Back side land. | 500.00 | 52,000.00 | 91 | 2.57 | C8 |
| 3. | Extension of Washing Machine Room. | 500.00 | 27,000.00 | 91 | 1,34 | C9 |
| 4. | Renovation of Driver's Duty Room, Extension and Modification of Gate near HO Quarters & Ceiling work for X-Ray Unit for A&E Building. | 500.00 | 22,000.00 | 91 | 1.07 | C9 |
| 5. | Construction of Patient Waiting shed Cubical Curtin, Aluminium works at ward No 18 and Supply and Fixing of Curtins at RHO Quarters. | 500.00 | 19,000.00 | 91 | 0.92 | C9 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffnaduring office hours, if necessary.
5. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 11.01.2021 up to 26.01.2021 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.
6. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 am on 27.01.2021, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

**Director (Chairman),**
**Regional Procurement Committee,**
**Teaching Hospital, Jaffna.**
09.01.2021.

# யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்

## மணிவிழா நாயகனின்

## சேவை நலன் பாராட்டுவிழா

**09.01.2021**

**திரு. தாமோதரம்பிள்ளை இராஜரட்ணம்**

(இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு - I)




யா/ உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்

24.04.1989 - 06.10.1997


**சேவையில் சிகரம் தொட்ட ஆசானை**
**வாழ்த்துகின்றோம்**

எண்ணொடு எழுத்தையும்
உடற் பயிற்சியை உயர்வோடும்
கண்ணெனக் கற்பித்து
கடமையை உயிரென எண்ணி
பண்பொடு பாரம் பரியமும் சொல்லி
திடமாய் தரணியில் நாம் உயர
ஏணியாய்நின்ற எம் ஆசானை
பல்லாண்டு காலம் சீரோடு சிறப்பாய் வாழ
முருக மூர்த்தி முருகனை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:
**பழைய மாணவர்கள்**
**உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்**

# சேவை நலன் பாராட்டு






**திரு. சோமசுந்தரம் இராஜேந்திரன்**

(Bsc.Nursing)

**பிரதம தாதிய பரிபாலகர் (1992 - 2021)**

**ஆதார வைத்தியசாலை தெல்லிப்பழையில்** இதுவரை காலமும் வைத்தியசாலை வளர்ச்சியில் தன்னை அர்ப்பணித்ததுடன் தாதியத்தையும் வளர்ச்சிப்பாதையில் இட்டுச்சென்று பெரும் சேவையாற்றி **09.01.2021** இன்றுடன் ஓய்வுபெற்றுச்செல்லும் எமது **பிரதம தாதிய பரிபாலகர்** அவர்களின் சேவையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
தாதிய உத்தியோகத்தர்கள்
குடும்பநல உத்தியோகத்தர்கள்
**ஆதார வைத்தியசாலை தெல்லிப்பழைச் சமூகம்**

Congratulations



## உலகப் பணக்காரராக உருவெடுத்தார் எலான்

வொஷிங்டன், ஜன. 9
உலகப் பணக்காரர்கள் பட்டியலில் 2வது இடத்தில் இருந்த எலான் மஸ்க், அமேசான் நிறுவுநர் ஜெப் பெஸோஸைத் தோற்கடித்து முதலிடம் பிடித்தார்.

மின்னல் வேக ஹைப்பர் லூப் பயணம், செவ்வாயில் மனிதர்களை குடியேற்றும் முயற்சி, அதிவேக எலெக்ட்ரிக் சூப்பர் கார்களை தயாரிப்பது என பல்வேறு கனவுத் திட்டங்களின் கதாநாயகனாகத் திகழ்கிறார் எலான் மஸ்க். கடந்த சில வாரங்களாக உலக பணக்காரர்கள் வரிசையில் இவர் இரண்டாவது இடத்தில் இருந்தார்.


இந்நிலையில், எலான் மஸ்கின் சொத்து மதிப்பு நியூயோர்க்கில் நேற்றுக் காலை 10.15 மணிக்கு 188.5 பில்லியன் டொலராக இருந்தது. இது அமேசான் நிறுவுநர் ஜெப் பிசோசாவை விட 1.5 பில்லியன் டொலர் அதிகமாகும்.

டெஸ்லாவின் பங்கு அதிவேக வளர்ச்சியில் செல்வதால் எலான் மஸ்க்கின் சொத்து மதிப்பும் உயர்ந்துகொண்டு செல்கிறது. கடந்த ஆண்டு மட்டும் டெஸ்லாவின் பங்குகள் 743 சதவீதம் உயர்ந்துள்ளன.

பெஸோஸ் கடந்த 2017ஆம் ஆண்டுமுதல் உலகப் பணக்காரர்கள் பட்டியலில் முதலிடத்தில் இருந்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# 20 ஆண்டுகளுக்குள் இஸ்ரேல் அழியும்

*ஈரான் நாடாளுமன்றத்தில் தீர்மானம்!*



தெஹ்ரோன், ஜன. 9
20 ஆண்டுகளுக்குள் இஸ்ரேலை இல்லாதொழிப்பதற்கும் அமெரிக்கப் படைகளை பிராந்தியத்தில் இருந்து அகற்றுவதற்கான பணிகளை மேற்கொள்வதற்கும் ஈரான் நாடாளுமன்றத்தில் நேற்றுப் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவால் ஈரான் குத்ஸ் படைத் தளபதி காசிம் சுலைமானி படுகொலை செய்யப்பட்ட ஓர் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு 16 சரத்துகளுடன் இந்த பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளது என ஈரானின் இஸ்னா செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. 2041ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இஸ்ரேலை அழித்து ஒழிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஈரான் அரசு மேற்கொள்ள இந்தப் பிரேரணை வலியுறுத்தியுள்ளது.

மத்திய கிழக்கில் இஸ்ரேல் என்றதொரு நாடு இருக்கக்கூடாது என்று அடிக்கடி வலியுறுத்தி வரும் ஈரான் தற்போது அது தொடர்பான தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்துள்ளமை பரபரப்பாகியுள்ளது.

அத்துடன், அண்மையில் அணுவாயுதங்களைத் தயாரிக்கும் யுரேனியத்தைச் செறிவூட்டும் பணிகளை ஈரான் அதிகரித்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-வ)

## அமெரிக்க கலவரம்: உயிரிழப்பு 5 ஆனது

வொஷிங்டன். ஜன. 9
அமெரிக்க அதிபர் ட்ரம்பின் ஆதரவாளர்களால் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட கலவரத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 5ஆக அதிகரித்தது.

பைடனை வெற்றியாளராக உறுதி செய்யும் அமெரிக்க நாடாளுமன்ற அமர்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்த அமர்வைத் தடுக்கும் விதமாக ட்ரம்பின் ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். சிறிது நேரத்தில் இந்த ஆர்ப்பாட்டம் கலவரமானது. நாடாளுமன்றக் கட்டடம் சேதமாக்கப்பட்டு ஆர்ப்பாட்டக் காரர்கள் உள்நுழைந்தனர்.

கலவரத்தை அடக்குவதற்கு பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இந்தக் கலவரத்தில் நால்வர் உயிரிழந்தனர் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நிலையில், காயம் காரணமாக சிகிச்சை பெற்றுவந்த பொலிஸ் அதிகாரியொருவர் நேற்று உயிரிழந்தார். இதையடுத்து இறப்பு 5ஆக அதிகரித்தது. (ம)



## பதவி நீக்கப்பட வேண்டும் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்!!

*சபாநாயகர் பெலோஸி*


வொஷிங்டன், ஜன. 9
அமெரிக்காவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலவரத்துக்குக் காரணமாக இருந்த அதிபர் டொனால்ட் ட்ரம்ப் உடனடியாகப் பதவி விலக்கப்பட வேண்டும் என்று பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் நான்சி பெலோசி கடுமையாக விமர்சித்தார்.

இந்தக் கலவரம் தொடர்பில் மேலும் தெரிவித்த பெலோஸி, அமெரிக்க ஜனநாயகம் நேற்று தாக்குதலுக்கு உள்ளானது.

அதிபர் ட்ரம்பின் செயலுக்கு அவர் உடனடியாக நீக்கம் செய்யப்பட வேண்டும். இது தொடர்பான சாதகமான பதிலை நாங்கள் துணை அதிபரிடமிருந்து எதிர்பார்க்கிறோம்' - என்றார். (ம)

## உருமாறிய கொரோனாவுக்கு எதிராகவும் செயலாற்றுகிறது

தடுப்பு மருந்து தொடர்பில் பைஸர் உத்தியோகபூர்வ அறிவிப்பு




லண்டன், ஜன. 9
உருமாறிய கொரோனா வைரஸுக்கு எதிராகவும் பைசர் கொரோனா தடுப்பு மருந்து சிறப்பாகச் செயல்படுகிறது என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பைசர் நிறுவனத்தின் சார்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'தென்னாபிரிக்கா மற்றும் பிரிட்டனில் கண்டறியப்பட்ட புதியவகை கொரோனா வைரஸ்கள் என்.501.வை என்கிற மரபணு மாற்றத்தைக் கொண்டுள்ளன. இதன் காரணமாக இவை மிக விரைவாகப் பரவுகின்றன. எனினும் புதிய வகை கொரோனாவுக்கு எதிராகவும் பைஸர் நிறுவனத்தின் தடுப்பு மருந்து செயற்படுகின்றமை முழுவதுமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது' என்றுள்ளது.

(ம)


## மரண அறிவித்தல்



### நகுலராஜா சிவமலர் (மலர்)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நகுலராஜா சிவமலர் (மலர்) நேற்று (08.01.2021) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி விஸ்வலிங்கம் தங்கம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்ற நகுலராஜாவின் பாசமிகு மனைவியும், நந்தினி, சுமதினி, காலஞ்சென்ற தர்சினி, சுபாஜினி, குமுதினி (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற விக்கினராஜா, பரமேஸ்வரி, லோகநாதன், அம்பலவாணர் ஆகியோரின் சகோதரியும், தனலட்சுமி, திருநாவுக்கரசு கணேசலிங்கம் ஆகியோரின் சகோதரியும், நாகேஸ்வரி, நாகராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும், நவரத்தினராசா (நவம் ரெக்ஸ்), இந்திரகுமார் (குவைத்), செல்வசுதாகர், விவேகானந்தம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், கஜேந்திரன்-அகிலாநந்தி (பெறாமகள்), லஸ்மியா, விதுசன், கம்ஷா, நிருத்திகன், ஜென்சிகா, தர்சிகன், லிவின்சிகா, ரித்திகா, வர்ணிகா ஆகியோரின பாசமிகு அம்மம்மாவும் கோஷியின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.01.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
T.P: 077 377 4178, 077 366 2263


(ம)

# டில்லியின் அழுத்தத்துக்கு அடிபணியவே கூடாது!!!

## சிங்கள கடும்போக்காளர்கள் சீற்றம்

கொழும்பு, ஜன.9
அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்ட விவகாரத்தில் இந்தியாவின் அழுத்தங்களுக்கு இலங்கை ஒருபோதும் அடிபணியக்கூடாது என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர வலியுறுத்தியுள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சரின் இலங்கை பயணம் மற்றும் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் அவரால் வெளியிடப்பட்ட அறிவிப்பு என்பன தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது
1987 ஆம் ஆண்டு இந்தியாவால் பலவந்தமாக திணிக்கப்பட்ட 13 ஆவது திருத்தச்சட்டமும், அதன்மூலம் உருவாக்கப்பட்ட மாகாணசபை முறைமையும் எமது நாட்டுக்கு அவசியமில்லை. இவை இரண்டும் இல்லாதொழிக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாம் இருக்கின்றோம். அதற்காகவே இந்த அரசுக்கு நாட்டு மக்களும் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை வழங்கியுள்ளனர்.

இந்த நிலையில் 13க்கு உயிர்கொடுக்கவும், உச்சபட்ச அதிகாரத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு இந்தியா முயற்சிக்கின்றது.

அந்நாட்டின் பிரதிபலிப்பையே வெளிவிவகார அமைச்சர் வெளிப்படுத்தியுள்ளார். எவ்வாறான அழுத்தங்கள் வந்தாலும் 13 விடயத்தில் இலங்கை அரசு பின்வாங்கக்கூடாது - என்றார். (ஒ-44)

# தவறான முடிவெடுத்து இளைஞன் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன.9
தவறான முடிவெடுத்து இளைஞர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை வீதி, நல்லூரைச் சேர்ந்த நா.மதன் (வயது 32) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார். இவர் தவறான முடிவெடுத்து நகைத் தொழிலுக்குப் பயன்படுத்தும் திராவகம் ஒன்றை உட்கொண்டு உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர் நகைவேலை செய்பவர் என்றும், புரேவியால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின்போது அவரும், அவரது குடும்பத்தினரும் வேறிடம் ஒன்றில் தங்கியிருந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அப்போது வீட்டில் இருந்த நகைகள் காணாமல் போனதால் மன உளைச்சலில் இருந்தார் என்று கூறப்படுகின்றது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (எ-26,25)

# விபத்தில் சிக்கியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன.9
விபத்தில் சிக்கிக் காயமடைந்தவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

கோயிலாக்கண்டி, கைதடியைச் சேர்ந்த இராசையா இராசநாகேஸ்வரன் (வயது61) என்பவரே உயிரிழந்தார்.

கடந்த 4ஆம் திகதி தனது மகனுடன் மோட்டார் சைக்கிளில் கமநல சேவைத் திணைக்களத்துக்குச் சென்றபோது, நாவற்குழி மகா வித்தியாலயத்துக்கு அண்மையில் அவர்கள் விபத்தில் சிக்கினர். வீதிக்குக் குறுக்கே வந்த நாயுடன் மோதியே இந்த விபத்து நடந்துள்ளது. விபத்தில் இராசநாகேஸ்வரன் மயக்கமடைந்துள்ளார்.

அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சிகிச்சை பயனின்றி அவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (எ-26,25)

# கஞ்சா கடத்தல்: மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 9
வியாபார நோக்கில் சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான ஒரு கிலோகிராம் கஞ்சா போதைப்பொருளை முச்சக்கர வண்டியில் கொண்டு சென்றனர் என்ற குற்றச்சாட்டில் மிருசுவிலில் மூவர் கைதுசெய்யப்பட்டனர்.

பளையைச் சேர்ந்த இருவரையும் கொக்குவிலைச் சேர்ந்த ஒருவரையுமே யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் நேற்றுக் கைதுசெய்தனர்.

அவர்களிடமிருந்து முச்சக்கர வண்டி மற்றும் அலைபேசிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் வழிகாட்டலின் கீழ் உப பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான குழுவினரே அவர்களைக் கைதுசெய்தனர். மூவரும் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் சாவகச்சேரி நீதிவானிடம் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (து-26)

# கஞ்சா மீட்பு: சட்டத்தரணி உட்பட மூவர் கைது

வவுனியா, ஜன. 9
வவுனியாவில் கேரளக் கஞ்சாவை உடமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இளம் சட்டத்தரணி உட்பட மூன்று பேரை பொலிஸார் நேற்றுக் கைதுசெய்துள்ளனர்.

அந்த சட்டத்தரணி வவுனியா செட்டிக்குளம் பகுதியில் கேரளக் கஞ்சா வைத்துள்ளார் என்று கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அங்குசென்று அவரைச் சோதனையிட்டபோது 700 கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது என்று செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர். அவர் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினராகவும் உள்ளார்.

மற்றைய இருவரும் வவுனியாவில் வெவ்வேறு இடங்களில் கஞ்சா வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் மூவரும் நீதிவானிடம் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (து-110,18)

# விபத்தில் காயமடைந்தவர் உயிரிழப்பு

கிளிநொச்சி, ஜன. 9
கிளிநொச்சியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

தருமபுரத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான உதயசேகர் கருணாகரன் (வயது 28) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 5ஆம் திகதி இரவு, கிளிநொச்சியிலிருந்து தருமபுரம் நோக்கி மோட்டார் சைக்கிளில் செல்லும்போது, முரசுமோட்டைப் பகுதியில் வீதியில் நின்ற மாட்டுடன் மோதுண்டு அவர் காயமடைந்துள்ளார். உடனடியாக கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். இந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார். (ஒ-113)

**தச்சு வேலைக்கு ஆட்கள் தேவை**
தச்சு வேலைக்கு மிஷின் வேலை தெரிந்த வேலையாட்கள் தேவை
T.P: 076 697 0214

**விற்பனைக்கு**
கிரவல், மணல், சல்லி, 6X9 கல்லு, சிப்ஷ், கலவன், ABC மற்றும் கட்டடத் தேவைக்கான அனைத்துப் பொருட்களும் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.
T.P: 0760085855, 0755000099

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் மானிப்பாய் மேற்கு கட்டுடை சந்தியில் இருந்து நவாலி வீதியில் 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. பிரித்து கொடுக்கப்படும். 2 பரப்பாக. தரகர் தேவையில்லை.
(பரப்பின் விலை 5 லட்சம்)
074 075 4204
077 623 4204

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் கோண்டாவில் இராச வீதிச் சந்தியில் கோண்டாவில் வீதியில் 6 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. 2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். தரகர் தேவையில்லை.
077 288 0152
077 805 1655
077 505 8561

**இடம் தேவை - OFFICE**
யாழ் நகரை அண்மித்த
ஒரு கிலோ மீற்றர் சுற்றுவட்டத்தில்
(CONSULTING OFFICE)
காரியாலயம் திறப்பதற்கு
20 அடி நீளம் 12 அடி அகலமுடைய
இடம் உடன் தேவை.
077 747 5783 / 077 724 2583

**அன்பொளி கல்வியகம்**
யாழ்ப்பாணம்
கல்வியாண்டு 2021
தரம் 3
தரம் 4
தரம் 5
Zoom வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
மாணவர் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் இணைய விரும்பும் மாணவர்கள் 076 174 7490 எண்ணுடன் தொடர்பு கொண்டு பதிவு செய்துகொள்ளவும்.

## மரண அறிவித்தல்

மலர்வு 07 . 01 . 1941



உதிர்வு 08 . 01 . 2021

**சிவசோதி பாலசுப்பிரமணியம்**
(ஓய்வுநிலை எழுதுவினைஞர்)

யாழ்ப்பாணம் சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் இல.618, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசோதி பாலசுப்பிரமணியம் (C.S. பாலா) 08.01.2021 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசோதி அகிலாண்டம் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற விமல அருளேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வல்லிபுரம் மற்றும் முத்துக்குமாரு (கனடா) பூலோகசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தசந்தன் (பொறியியலாளர்-அவுஸ்திரேலியா) வசந்தன் (Egait (Pvt) LTD) கீர்த்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரியா (பல்வைத்தியர்-அவுஸ்திரேலியா) றமா (வங்கி அலுவலர்-கொமர்ஷல் வங்கி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், றெவின், சிவோன் (அவுஸ்திரேலியா), திவ்வியா, கஜானன் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.01.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பா.வசந்தன்
077 230 0006
021 222 8033



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.